பக்கங்கள் எட்டு:
விலை ரூபா 5-00

Registered as a News Paper in SriLanka



யாழ்ப்பா...
நாவாந்துறைப் ...


# வலம்புரி
# VALAMPURI


அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
**அர்ச்சனா ஜுவலர்ஸ்**
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1895)



சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 28 வியாழக்கிழமை 10-05-2001 தொலைபேசி: 3378 ஒலி: 140


## முஸ்லிம்களின் ஆர்ப்பாட்டங்களை எதிர்த்து தலைநகர் கொழும்பில் மாபெரும் பேரணி

### சிஹல உறுமய ஏற்பாடு

மாவனல்ல சம்பவத்தையடுத்து கொழும்பு, மூதூர் பகுதிகளில் முஸ்லிம் மக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் கலகங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அத்தகைய ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட முஸ்லிம்கள் கைதுசெய்யப்படாமையைக் கண்டித்தும், இன்று தலைநகர் கொழும்பில் மாபெரும் எதிர்ப்புக் கூட்டத்தையும் பேரணியையும் சிஹல உறுமயக்கட்சி நடத்தவுள்ளது.

முஸ்லிம்களின் செயல்களைக் கண்டிக்கும் எதிர்ப்புக் கூட்டம் கொழும்பு திம்பிலிக்காய விகாரையில் இன்று நண்பகல் 1-00 மணிக்கு (8ம் பக்கம் பார்க்க)

## செங்கலடியில் சிப்பாய் பலி

(மட்டக்களப்பு,

மட்டக்களப்பு செங்கலடி இராணுவமுகாம் முன்னரங்க காவலரன் மீது நேற்று இரவு 8.00 மணியளவில் விடுதலைப புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார் மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத் தாக்குதலையடுத்து படையினர் பரவலாக ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர். (8ம பக்கம பார்க்க)

## நோர்வேயின் சமாதான முயற்சியில் புதிய திருப்பம்

# கொழும்பு வரும் எரிக்சோல்ஹெய்ம் வன்னியில் பிரபாவை சந்திப்பார்!

(லண்டன்)

இலங்கை அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே அதிகார பூர்வமாக யுத்தநிறுத்த உடன்பாட்டை கொண்டுவந்து பேச்சுவார்த்தைக்கு உகந்தசூழ்நிலையை ஏற்படுத்துவதில் நோர்வேயின் சிறப்புப் பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம் முயற்சித்துவருகிறார்.

இது தொடர்பான ஆக்க பூர்வமான யோசனைகளை சொல்ஹெய்ம் என்னிடம் தெரிவித்துள்ளார். இதுபற்றி விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்குத் தெரிவிக்கவுள்ளேன். என்று புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் லண்டனில் தெரிவித்துள்ளார்.

இதேசமயம் அடுத்தவாரம் இலங்கைக்கு வரும் எரிக்சொல் வன்னி சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்துப் பேசவுள்ளார்.

நோர்வேயில் இருந்து நேற்று லண்டன் சென்றசிறப்புப் பிரதிநிதி எரிக்சோல்ஹெய்ம் அங்கு விடுதலைப் புலிகளின்அரசியல்ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

இப்பேச்சின்போதுகொழும்பில்ஜனாதிபதிசந்திரிகாவுடன் நடத்தியபேச்சுக்கள்குறித்தும் யுத்தநிறுத்தம் பற்றியும் விளக்கமாக எடுத்துக் கூறியதை அடுத்து மேற்கண்ட கருத்தினை அன்ரன் பாலசிங்கம் எரிக்சோல்ஹெய்மிடம் தெரிவித்துள்ளார்.

### பிரபாகரனின் கவனத்திற்குக் கொண்டு வருவேன்

எரிக்சோல் ஹெய்ம் தெரிவித்த சமாதானப் பேச்சுவார்த்தைக்குரிய சில ஆக்க பூர்வமான அரசின் யோசனைகளைத் தலைவர் பிரபாகரனின் கவனத்திற்குக்கொண்டு வரவுள்ளதாக அன்ரன் பாலசிங்கம் லண்டனில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து விடுதலைப் புலிகள் கொண்டுள்ள நிலைப்பாடு தொடர்பாகவும் அன்ரன் பாலசிங்கம் (8ம் பக்கம் பார்க்க)

## புலிச்சந்தேக நபர் மீது வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

பூநகரி இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாகசந்தேகிக்கப்படும் ஒருவர் மீது சட்டமாஅதிபர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

விடுதலைப்புலி உறுப்பினர் எனச் சந்தேகிக்கப்படும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராமலிங்கம் உதயநாதன் என்பவருக்கு எதிராக இவ் வழக்கு தாக்குதல் செய்யப்பட்டுள்ளது;

தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று மேல்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது ;(வ)

## பயங்கரவாதத் தடைக்கு எதிராக பிரிட்டனில் ஆர்ப்பாட்டம்

[லண்டன்]

பிரிட்டனின் பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிராக நேற்று அங்கு ஆர்ப்பாட்டப் பேரணிஒன்று நடாத்தப் பட்டது. இந்தஆர்ப்பாட்டப்பேரணியில் சுமார் இரண்டாயிரத்து 500பேர்வரை கலந்து கொண்டனர்,

தமிழீழ விடுதலைப்புலிகள் உள்ளிட்ட 21 அமைப்புக்களைத் தடைசெய்யும்பயங்கரவாத தடைச்சட்டத்தைபிரித்தானியப் பாராளு மன்றம் நிறைவேற்றியதை எதிர்த்து இந்தஆர்ப்பாட்ட ஊர்வலம் பிரித்தானிய உள்துறை அலுவலகம் முன்பாக நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது; [வ]

## ஈழத்தமிழர் குடும்பத்தை ஜேர்மன் நாடுகடத்தியது

ஜேர்மனி பிறைமன் மாநிலத்தில் வசித்தஈழத்தமிழர் குடும்பமொன்று அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு நேற்றுஇலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

கதிரன்பரராஜசிங்கம் அவரதுமனைவி மேரிஅஞ்சலா றோஸ் பிள்ளைகளான ஒந்துஜா பிரிஜோன் மற்றும சரோன் ஆகியஐவருமே பலவந்தமாக திருப்பியனுப்பப்பட்டவர்களாவர்.

மேற்படி குடும்பம்1996ம் ஆண்டு மூன்றுவயதுக்குழந் (8ம்பக்கம் பார்க்க]

## மிருசுவில் படுகொலை சந்தேக நபர்கள் நேற்று நீதிமன்றில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

மிருசுவில படுகொலைச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டிருந்த 14 கைதிகளும் நேற்று சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் அ. பிறேம் சங்கர் முன்னிலையில் இராணுவப் பொலிசாரால் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்;

புலோலியில்இயங்கும் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட மேற்படி கைதிகளை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை மேற்படிகைதிகள் கடந்த பெப்ரவரி மாதம 25 ஆம் திகதி யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம அங்கிருந்த தமிழ்க் கைதிகளுடன் மோதலில் ஈடுபட்டதையடுத்து இக் கைதிகள் பலாலி இராணுவ பொலிஸ்காவலில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது (இ-06)

## சிங்கள பேரினவாதிகளால் முஸ்லிம் மக்கள் தாக்கப்பட்டமைக்கு பல்கலைமாணவர்ஒன்றியம்கண்டனம்

(யாழ்ப்பாணம்)

மாவனெல்லை பகுதியில் தமிழ் பேசும்முஸ்லிம் சகோதரர்கள் சிங்கள அரசபடைகளினால் கொல்லப்பட்டமையும் அதன்எதிரொலியாகநிகழ்ந்த இனமோதல்களினால் முஸ்லிம் சகோதரர்கள் பாதிக்கப்பட்டதையும்யாழ்.பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் வெகு வன்மையாகக் கண்டிக்கின்றோம்;

சிங்களப் பேரினவாத அடக்குமுறைக் கொடுமைகளைக் கடந்த 17 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்து வரும் தமிழ் பேசும் மக்களின் மீது காலத்துக்குக் காலம் ஆட்சி பீடத்தில் இருக்கும் சிங்கள அரசியல் தலைமைகள் இனக்கலவரத்தைக் கட்டவிழ்த்துவிடுவது இலங்கையின் வரலாற்றில்புதியதல்ல. இந்நிலைமையில் தமிழ்—முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து தமதுஉரிமைகளை வென்றெடுப்பதற்காக ஒரே குரலில் ஒரே கொள்கையில் உறுதியாக இருப்பதுதான் சிங்கள பேரினவாத இரும்புக் கரங்களை உடைத்தெறிவதற்கான ஒரேமார்க்கமாகும்.

இவ்வாறு யாழ்பல்கலைக்கழக மாணவர்ஒன்றியம் முஸ்லிம் மக்கள் மீதானதாக்குதலைக் கண்டித்துவிடுத்த [8ஆம் பக்கம் பார்க்க]

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## மெய்வல்லுநர் தெரிவுப் போட்டி

(ஆவரங்கால்)

கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வலலுநர் தெரிவுப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை யா| கோப்பாய் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் காலை 8 30 மணி தொடக்கம் பி.ப 5 30 மணிவரை இடம்பெறவுள்ளது.

மறுதினமான சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 5.00மணி வரை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் சுவட்டு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளதாக கோப்பாய்க் கல்விக்கோட்ட அதிகாரி இ. சிவஞானசுந்தரம் தெரிவித்துள்ளார்; (உ-57)

## நிர்வாகசபைக் கூட்டம்

(மல்லாகம்)

யாழ். மாவட்ட விழிப்புலன் இழந்தோர் சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10 00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

(உ 2 )

## விருத்தியடைந்த...

[7ம் பக்கத் தொடர்ச்சி]

யத்தையும்இன்னும் சிலருக்கு வாழ்வின் மீதான சலிப்பையும் உண்டு பண்ணுகின்றன. இந்த அபிப்பிராய பேதங்கள் உள்ளத்தை நலிவடைந்த ஒரு நிலைக்கே இட்டுச் செல்கின்றன. ஆளுமை விருத்தி பெறநினைப்பவனை அடிமை நிலைக்குத் தள்ளி விடுகின்றன.

எதற்கும் வாழ்க்கை பற்றியதான தம்மைப் பற்றிய படம் self Image) ஒவ்வொருவருக்கும் தேவையானது: பெற்றோர், உறவினர், சமூகம் சூழ் நிலைகள் தான் இந்தப்படத்தைத் தீர்மானிக்கின்றன. இப்படத்துக் கேற்பவே உயர்வான எண்ணங்கொண்டவர்களும் தாழ்வான எண்ணங்கொண்டவர்களும் நடந்து கொள்கிறார்கள்;

### கல்வியின் பங்கு

ஒரு மனிதனின் ஆளுமை விருத்தியில் கல்விக்கும் ஒரு குறிப்பிட்ட பங்கு உண்டு. ஆளுமை விருத்தியில் கல்வியின் பங்கு என்ன? இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் அதிபர் ஒருவர் இவ்வாறுகூறுகிறார் ''நான்நாஸிஸ்ட்டுகளின்சிறையில் அடைக்கப் பட்டிருந்தேன் நச்சு வாயுக் கூடங்களில் எம்மை அடைத்தனர் நச்சு வாயுக் கூடங்களை அமைத்தவர்கள் படித்த பொறியியலாளர்கள். டாக்டர்கள் சிறுவர்களை நஞ்சூட்டிக் கொன்றனர். தாதியர் பச்சிளம் பாலகர்களை கொலை செய்தனர். பெண்கள், பிள்ளைகளை கலாசாலை கல்லூரி ஆசிரியர்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர். எனவே எனக்குக் கல்வியில் ஒரு சந்தேகம். கல்வி இப்படிப் பட்டவர்களை உருவாக்கி இருக்கிறதே''

மாணவர்கள் எதிர்காலத்தில்மனிதர்களாகமாறக்கல்வியும், போதிப்போரும் உதவி செய்ய வேண்டும். அவர்கள் மனநோயாளிகளாகவோ அரக்கர்களாகவோவர அனுமதிக்கக் கூடாது. அவர்களின் கல்வியில் முக்கிய பங்கு வகிப்பவர்களாக ஆசிரியரும் பெற்றோரும் விளங்குகிறார்கள்.

ஒரு பிள்ளை வளர்க்கப்பட்ட விதம் மற்றும் அவனின் பாதுகாப்பு என்பனவே அவனை ''நான் எனது குடும்பத்திற்கு வேண்டியவன்'' என்ற உணர்வை ஊட்ட உதவுகின்றது எந்தப் பெற்றோரும் தமது குழந்தை மேல் நிலையை அடைவதையே விரும்புகிறார்கள். அவர்களின் ஆளுமை விருத்தியடைய அவர்களின் ஒவ்வொரு செய்கைகளிலும் தட்டிக் கொடுக்கப்படவேண்டும்; ஆனால் பெற்றோர் சிறுசிறு விடயங்களில் எல்லாம் தவறு செய்வதையே கண்ணாரக் காணக் கூடியதாகவுள்ளது.

எமது நாட்டின் கல்வித்திட்டத்தில் மாணவர் தமது திறமைகளை வெளிக்கொணர்வதற்கேற்ற கல்விசார் செயற்பாடுகள் குறைவாகவே உள்ளன. இதனால் அவர்களின் தனித்துவங்கள் மறைக்கப்படுகின்றன. அல்லது மறுக்கப்படுகின்றன. இதைத்தடுத்து நிறுத்தி ஆளுமை விருத்தியுள்ள மாணவர் சமுதாயத்தை எவ்வாறு காப்பாற்றப் போகிறோம் என்ற கேள்வி ஒவ்வொரு கல்வியியலாளரின் உள்ளத்திலும் எழ வேண்டும்: இது காலத்தின் கட்டாய தேவை.

### மரத்துப்போன சமூகம்

மனிதசமுதாயத்தில் பலவிதமான ஆராய்ச்சிகள் இடம் பெறுகின்றன. ''நாம் பிறப்பதற்குமுன்னரே இறந்து விடுகிறோம்'' என்கிறார் ஓர் உளவியல் ஆசிரியர். இது எதைக் காட்டுகிறதென்றால் மனிதங்கள் மரணித்துப்போன அல்லது மரத்துப்போன ஒரு சமூக அமைப்பே பிரசவிக்கப் பட்டிருக்கிறது: என்பதையே ஆகும். வாழ்நாளில் ஒரு முறை கூட அழாதவர்கள், சிலர் இறக்கும் போது பலத்த குரல் எழுப்பிஅழுகிறார்கள். அவர்கள் வாழ்க்கையைக் கவனித்தார்களே ஒழிய அவர்கள் வாழவில்லை என்பதே அந்த உளவியலாளரின் கருத்து.

என்னால் எதுவும் செய்ய முடியாது நான்உபயோகமற்றவன் என்ற தாழ்வு மனப்பான்மை ஒரு மனிதனது ஆளுமை விருத்திக்கு முதலாவது தடைக்கல். ஒவ்வொரு மனிதனும் தனித்துவமானவன்: ஆளுமைஒவ்வொருவரிடத்தும் வேறுபட்டது; மற்றவருக்கு உதவிசெய்ய முன்வருகின்ற ஆளுமையாக ஒருவனிடத்தில் அது வளர்த்தெடுக்கப்படுமானால் மற்றை மனிதர்களில்இருந்து அவனை வேறுபடவைக்கிறது;

எனவே ஆளுமை மிக்க மானிடர்களாக ஒவ்வொருவரும் வெளிவரும்போது உடலாலும் உளத்தாலும் மேம்பட்ட சமூக பொருளாதார, அரசியல், கலை, கலாசார ரீதியாக விருத்தி அடைந்த நற்சமுதாயமொன்று உருவாகும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை;

# அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் காங்கிரஸின் அறிவிப்பு கண்டிக்கத்தக்கது


(கொழும்பு)

பொதுஜனஐக்கியமுன்னணி அரசில் முஸ்லிம் காங்கிரஸ் அங்கம்வகித்துக்கொண்டு அரசிற்கான ஆதரவை விலக்கிக் கொள்ளப்போவதாகதெரிவித்திருப்பது கவலை அளிப்பதாக அமைச்சர்கள் அலவி மௌலானா, பௌசி ஆகியோர் தெரிவித்துள்ளதுடன் இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிக்காவின் கவனத்துக்கும் கொண்டு வரவுள்ளார்கள்;

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது

மாவனல்ல சம்பவம் தொடர்பாகஜனாதிபதி விரிவான நடவடிக்கை மேற்கொண்டிருக்கும் நிலையில் இத்தகைய செயல்களில் முஸ்லிம் காங்கிரஸ் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாதுஎன்றும் இதுதொடர்பாக இன்றும்ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறவுள்ளதாகதெரிவித்துள்ளனர், (வ)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

| தாயின் மடியில் | | இறைவன் அடியில் |
|---|---|---|
| 02 ■ 08 ■ 1942 |  | 06 ■ 05 ■ 1996 |

அமரர்

### பொன்னர் வெற்றிவேலாயுதம்

(வெளிக்கள உத்தியோகத்தர்- யாழ்; செயலகம்)

திதி- 10. 05. 2001

காலத்தின் கோலத்தால் காலனன்வ கையில்
கருகிய மலராய் நீங்கள் காற்றோடு கலந்து விட்டாலும்
காலமெல்லாம் கண்ணீருடன் நாம் காத்திருப்போம்
உங்கள் நினைவுகளுடன்.....;

அன்னாரின் இல்லத்தில் இன்று நடைபெறும்
ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன
விருந்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும்
அன்புடன் வேண்டி நிற்கிறோம்;

மனைவி- வெ. காந்திமதி
மகள்- க. சாரதா (கொழும்பு)
மருமகன்- க. கதிர்காமநாதன் (கொழும்பு)
மகன்- வெ. சுதர்சன் (லண்டன்)
மகள்- வெ. சுதர்சினி
மகன்- வெ. சுயந்தன் (திருகோணமலை)
மகள். வெ. சுகந்தினி

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

கி-1970

## நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன

வலிகாமம் மேற்குப்பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்டுள்ள நூறு அபிவிருத்தி தொண்டர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் வலி. மேற்கு பிரதேச செயலர் க. குணராஜா, பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநதன் மற்றும் பிரதேச செயலகஅதிகாரிகள் பங்கு கொண்டனர்.

(உ-24)

## தமிழ்மக்களின்....

[7ம் பக்கத்தொடர்ச்சி]

இழந்த உரிமைகளை மீட்பதற்காக நாம் ஒருகாலத்தில் இணைப்பாட்சி இயக்கத்தைத்தொடக்கிவைத்தோம்: ஆனால் இணைப்பாட்சிமூலம் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவது முடியாததாய் விட்டது: கடந்தகால அனுபவங்களின் வாயிலாக இதனை அறிந்து விட்டோம்.

இந்த அனுபவங்களின் அடிப்படையில் நாங்கள் தனியே பிரிந்து வாழ வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்துவிட்டோம். இதை நாம் செய்யாவிட்டால் தமிழினம் தனது இழந்த உரிமைகளை ஒருபோதும் மீட்டுக்கொள்ள முடியாது.

எங்கள் முன்னோர்கள் புத்திசாலிகளாக இருந்தார்கள்; அவர்கள் தங்களுக்கெனத் தனியாட்சியை வைத்திருந்தனர். இலங்கையின் வரலாற்றில் எங்களுக்கென ஓர் இடம் இருந்திருக்கிறது. எங்கள் இயக்கம் நாட்டைப் பிரிக்கும்படி கோரவில்லை. இழந்த எங்கள் உரிமையான தமிழ் அரசை மீள அமைக்க வேண்டும் என்பதே எங்கள் நிலையாகும்.

தனித் தமிழ் ஈழத்தை நிறுவும் இலட்சியத்தை நோக்கி எங்கள் இயக்கம் முன்னேறுகின்றது. தனித் தமிழ் ஈழம் நிறுவுவது எளிதான காரியமல்ல என்பதும், மிகவும் வில்லங்கமானது என்பதும் எங்களுக்குத் தெரியும். ஆனால், நாம் ஒன்றில் சிங்களவரின் அதிகாரத்திற்குள் இருந்து விடுபட்டு வெளியேற வேண்டும். அல்லது அழிந்துபோக வேண்டும். இது உறுதியானது: எனவே, நாங்கள் ஈபோராடித் தனித் தமிழ் ஈழத்தை நிறுவியே தீருவாம்!

நாங்கள் இணைப்பாட்சிக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டோம். எங்கள் தனிநாட்டுக்கான இயக்கம் அறவழி அடிப்படையிலேயே நடைபெறும், என்று பாராளுமன்றத்தில், 1976-11-19 இல் இறுதி ஆணையாகச் செல்வா கூறியுள்ளார். இப்போதைய இக்கட்டான சூழ்நிலையிலும் அன்னாரின் நினைவு எமக்குப் பசுமையாகவே மிளிர்கின்றது;

## ஆசிரியர்களுக்கு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி வலயத்தில் சுகாதாரமும் உடற்கல்வியும் தரம் 6,7,8,9,10 மற்றும்11 வகுப்புக்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 12ம் 13ம்திகதிகளில் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் கருத்தரங்கு நடைபெறுமென்று தென்மராட்சிவலயக் கல்விப்பணிப் பணிப்பாளர் வீ.செல்வராஜா அறிவித்துள்ளார்; (இ)

## இராசி பலன்

[10-05-2001]

[சித்திரை 27 வியாழன்]

திருதியைமு.இ8.12வரை

கேட்டை பி.ப4.07வரை

ராகு காலம் 1.24-2.54

நல்லநேரம் 7 24-8.54

சித்தம்

**மேடம்**

அச்சமான நிலை, பிரயாணம், உஷ்ணவியாதி, முயற்சி தாமதம்.

**இடபம்**

வீண்தொல்லை, வியாதி, நல்லஉணவுகிடைத்தல், காரியத்தடங்கல்,

**மிதுனம்**

வாகனவசதி, கௌரவம், தனவரவு, திடீர்சந்திப்பு.

**கடகம்**

சந்தோசமானநிலை, இலட்சுமிகரம், முயற்சி விருத்தி, வியாதிகுணமடைதல்;

**சிங்கம்**

மனச்சஞ்சலம், நிலைமாற்மாற்றம், காரிய தாமதம், குடும்பக் கவலை;

**கன்னி**

தாய்வழிஉறவு, உறவினர மனஸ்தாபம், பெரியோர வெறுப்பு, முயற்சிதாமதம்,

**துலாம்**

நினைத்தகாரியம்கைகூடும் வாக்குமேன்மை, அன்னியர் சந்திப்பு, பிரயாணம்;

**விருச்சிகம்**

வீண்செலவு, மதிக்கப்படாமை, காரியதாமதம், விதண்டாவாதம்;

**தனுசு**

ஜனவசியம், நண்பர்கள் உதவி, பெரியோர்ஆசிமுயற்சி கைகூடும்;

**மகரம்**

வீண்அலைச்சல், மனக்கிலேசம், பிதாசிந்தை, சுபசெலவு.

**கும்பம்**

காரியநன்மை, கீர்த்தி, தனவரவு, நண்பர்கள் சந்திப்பு,

**மீனம்**

தொழில்சிறப்பு, அதிகாரம் சந்தோசமானசெய்தி, முயற்சி கைகூடும்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது;)

வளவன்


## என் வாழ்க்கையில் தேவன் பெரிய கிருபை செய்தார்

### கர்த்தருடைய பரிசுத்த நாமந்திற்கு ஸ்தோத்திரம்

கடந்த 1 வருட காலமாக யுத்த அபாயங்களிலும் மற்றும் எல்லாவித ஆபத்திலும் இருந்து என்னையும் என் குடும்பத்தினரையும் காப்பாற்றி போஜித்து வந்த கர்த்தரின் பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்:

எனவே சகோதர, சகோதரிகளே தேவன் எம்மிடம் பெரிய காரியங்களைச் செய்யும்படி ஆலோசனை கூறாமல், அவருக்கு கீழ்ப்படிந்தால் எமக்கு பெரிய ஜெயம் உண்டு. உங்களுக்கும் தீர்க்க ஆவியூடாக தேவன் எதைச் செய்யும்படி ஆலோசனை கொடுக்கின்றாரோ அதைச் செய்யுங்கள். கர்த்தரின் சத்தத்திற்கு செவி கொடுத்தால் நமக்கு சுகம் கிடைக்கும்;

ஜெபமே ஜெயம்
ஓர்இயேசுவின் அடியார்

கி-1972

# மிதி வெடி செயற்பாட்டு குழுவினால் விழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)
யுனிசெவ் நிறுவன உதவியுடன் அரச அதிபர் அனுசரணையுடன் இம்மாதம் 2 ஆம் திகதி முதல் மீண்டும் கச்சேரியில் மிதிவெடி செயற்பாட்டு குழு செயற்பட ஆரம்பித்துள்ளது:

இச் செயற்பாட்டுக்குழுவானது, பாடசாலைகள் ரீதியாக மிதிவெடிவிழிப்புணர்வு கருத்தரங்குகளை வழங்குதல்,

மாணவர் மட்டத்தில் மிதிவெடி விழிப்பு தொடர்பான வினா விடைப் போட்டிகளை நடத்தி பரிசில்களை வழங்குதல்,

பிரதேச ரீதியாக 200 தொண்டர்களை உள்வாங்கி அவர்களூடாக விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை வழங்கி, கிராம மக்கள் மத்தியில் விழிப்பை ஏற்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது.

மேற்படி தொண்டர்களாக இணைய விரும்புவோர் யாழ். செயலகத்தில் இயங்கும் மிதிவெடி செயற்பாட்டுக்குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, மக்கள் மீளக் குடியமர்ந்த தென்மராட்சிப் பகுதிகளில் மிதிவெடி விழிப்பு பற்றிய நடமாடும் சேவையை வழங்குவதோடு, கருத்துரைகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன. (உ-10)

# அபிவிருத்தித் தொண்டர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கல் இன்று

(யாழ்ப்பாணம்)
நல்லூர் யாழ்ப்பாணம் பிரதேச செயலர்பிரிவுகளில் அபிவிருத்திதொண்டர்களாகநியமனம் பெற்றவர்களை இன்று காலை9மணிக்குவடக்குபுனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகாரங்கள் அலுவலகத்தில் வந்து நியமனக்கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் அறிவித்துள்ளார்.

நியமனக் கடிதங்களைஅமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்குவார்.

நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளவர்களின் பெயர்கள் பயிற்சி நெறி ரீதியாக வருமாறு,

### நல்லூர் பிரதேச செயலர்

**மரவேலை தொழில்நுட்ப பயிற்சி**

நடேஸ் பிரசாத்- செல்வம் அருண்மாறன்- சற்குணராசா சசீலன்- இரத்தினம் மணிவண்ணன்- ஐயாத்துரை கவீஸ்கரன்- சண்முகராசா சதீஸ்- கந்தசாமி ஜெபர்சன்- தருமன் சதீஸ்குமார்- இராசரத்தினம் ரதீஸ்வரன்,

யோகராசா யாழ்த்தன்- தர்மராசா கோவிந்தராசா- கந்தையா தேவதீசா- சண்முகராசா சதீஸ்கரன்,

கோபாலசிங்கம் சதுர்முகன்-துரைராஜா திருலோகநாதன்- பேரம்பலம் ஜெயச்சந்தர்- கந்தசாமி ரொனிக்கஜன்-ஐயம்பிள்ளை சிறிபன்- தம்பிரட்ணம் ரஜனிகாந்தன் கிருஸ்த்துராஜா றொபின்சன்.

**இயந்திரத் தொழில்நுட்ப பயிற்சி**

இராசையா விஜயமோகன் கணபதிப்பிள்ளைநந்தபாலா- பெ. பிரசன்னா- தேசிங்கம் தேவகன்- ஜெயக்கொடி பிரதீப்- பாலசிங்கம் நிமல்- செல்வரத்தினம் ராஜேந்திரன்- வாமதேவன் கிருபராஜ்- தியாகராசா ஞானேஸ்வரன்- சிவகுமார் அஜித்தன்- சின்னராசா தர்மிலன்- அற்புதராசா சுரேஸ்வரன்,

சி. கேதீஸ்வரன்- நித்தியானந்தராசா நித்தியசுதன்- வரதராசா வசந்தராசா-வீரசிங்கம் உதயகீதன்- ஜெஸ்லிபாலா முத்துராசா- மகேஸ்வரன் வரதராசா- மகாலிங்கம் அருட்செல்வம்- பரமேஸ்வரன் பகீரதன்,

மார்க்கண்டு நந்தகுமார்- முத்துராசா சுதர்சன்- செல்வராசா நிமல்ராஜ்- பூபாலசிங்கம் பன்னீர்செல்வம்-கனகரட்ணம் ராஜா- சரவணமுத்து நெப்போலியன்- கந்தையா சந்திரகுமார்- பொன்னையா மயூரன்- செல்வரட்ணம் தஜேந்திரன்- சதாசிவம் சிவசிலன்- கந்தசாமி குகன்- இந்திரன் இந்திரகுமார்- மரியாம்பிள்ளை லோறன்ஸ்தாஸ்- தேவராஜா நியகன்- குலசேகரம் கேதீஸ்வரன்- கந்தசாமி பிரசன்னா- பத்மநாதன் நிமலதாஸ்- செல்வராசா சதீஸ்வரன்- செல்வரட்ணம்ரமேஸ்

**கால்நடை வளர்ப்பு தொழில் நுட்ப பயிற்சி**

துரை விமலினி-துரைசிங்கம் ஜெயந்தி- பத்மினி கிருஸ்ணராசா- யாழினிமுத்துலிங்கம்- காசிலிங்கம் தர்சினி- சிந்துஜா சிவலோகநாதன்- இராமசாமி நிர்மலா- செ. லூசாமினி- ப. குமுதினி- சர்மிளா நாகேஸ்செனிஸ்ராதுரைரெட்ணம்- கமலகாந்தி கமலாகரன்- பாமினி இராசரட்ணம்- சுமித்திரா கனகலிங்கம்- அமுதலிங்கம் யாழினி- சுதர்சினி ஐயாத்துரை- விஜித்தா கந்தசாமி- சண்முகநாதன் தர்சினி சுமதி சுப்பையா- றெஜித்தா நடராசா.

**உணவுத் தொழில் நுட்ப பயிற்சி**

தெய்வசிறிஆனந்தன்மாலினி கனகரத்தினம் நந்திதா- சுதர்சினி சுப்பிரமணியம்- சுபாசினி சுப்பிரமணியம்- மஞ்சுளா பொன்னுத்துரை- வேணி சுபாசினி வேலாயுபிள்ளை- செல்லையா நுகர்ந்தினி- ஆறுமுகம் பரமேஸ்வரி- தர்மதயாளன் வசந்தினி- ஜெயறூபி யோசெப்- சுபர்ணா வீரசிங்கம்- பகீரதி பகவத்சிங்- இரத்தினசிங்கம் சந்திரிக்கா- முத்துலிங்கம் சுஜாதா- கனகலிங்கம்ரசிகா- ஆனந்தன் காமினி- சிறில் அனுசியா- பொன்னுத்துரை சந்திரகலா- தயாளினி கைலாயநாதன்- அந்தோனிப்பிள்ளை சுதர்சனா லூஜி-

### யாழ்ப்பாண பிரதேச செயலகம்

**கடல் உணவு பதனிடல்**

றிச்சாட் யோஆன் கொலின்ஸ்- பாக்கியநாதர் சியாமளா- கயேந்தினி துரைசிங்கம்- நீ. தேவதாஸ் ஆன் அனிற்றா- ஆறுமுகம் காயத்திரி.

அருளானந்தம் திரவியகுமாரி- தே. கலையரசி- சாந்தினி அந்தோனிப்பிள்ளை- சுகுமார் மரிஸ்ரெலா- அருள்பிரகாசம் அனுஜா.

வஸ்தியாம்பிள்ளை மோரி விகோரியா- சின்னராசா ஜெலிஸ்ரினா- சற்பிரசாத ராணி றெஜினோல்ட்டெனி- பின்லையர் தர்சினி- சி. கௌரி.

மங்கையற்கரசி பூலோகசுந்தரம்- றாதிகா கொன்சன்ரைன்- அமர்தநாதன் ரஜிதா- அன்ரன் ஜெயராசா வியாட்றீஸ்- அமலதாஸ் பிறிஷாந்தினி:

**மின்தொழில் நுட்பம்**

தம்பித்துரைவிஜயதர்சினி- த. மேரி பிறின்சி டயானா- மரியநாயகம் கிருபாஜினி- செல்வராசா நிறோஜினி- தம்பையா றஞ்சினி.

சீனி றஜிதேவி- ரஞ்சிதபாதம் யுவதா- துரைராசா ஸ்ரெலா- யோகராசா பிரவீனா- செல்வராசா சுதா.

நந்தினி வைத்திலிங்கம்- கனகசபாபதி நந்தினி- யசிந்தா பிரேமதாஸ்- திருமதி. மகேந்திராசா சுபாசினி- பாலகிருஷ்ணன் வனிதாதேவி.

சிவப்பிரகாசம் சிவசக்தி- சுபாஷினி கனகலிங்கம்- யேசுதாசன் கறோலின்- துரைராசா ஜனார்த்தனி- பு. சுகிதா.

சுப்பிரமணியம் குமணன்- தம்பையா சத்தியமூர்த்தி- ஆனந்தம் சர்வலோகநாதன்- பாலசிங்கம் கீர்த்தன்- ஆருளானந்தம் நிக்ஷன்- செபஸ்ரியாம்பிள்ளை பிறேமராஜா- தம்பித்துரை வைகுந்தன்- யேசுதாசன் கலாசியோன்- முத்தன் மகேந்திரன்- துரைசிங்கம் வின்சன்- சின்னவன் கேதீஸ்வரன்- தனபாலசிங்கம் இந்திரகுமார்- சுந்திரராஜ சசிகுமார்,

சிறிஸ்கந்தராஜா ஜெகன்- பெனடிக்ற் விமல் கொன்சன்ரைன்-நாகராஜா கலைச்செல்வன்- யூலியன் சுரேஸ்குமார்- றெயிமேனால்ட் லெனா- சீ. பாலச்சந்திரன்- ந. காந்தரூபன்- ஆருளானந்தம் றஞ்சித்- பற்றிக் மேரியான்- திருச்செல்வம பிரதீபன்- கந்தசாமி பிரதீபன்- பாஸ்கரன் சதீஸ்குமார்- சின்னராசா யுகேந்திரன்- சவரிமுத்து யோகரட்ணம்- ஆந்தோனி லியோ,

இ. வின்சன்- தியாகராசா ஜெகதீஸ்வரன்- செல்வராசா செலவகுமார்- ஆருளாநந்தம் அருள்பிரகாஷ்- ந. யோகிஸ்வரன்- சுறிபரன் சிவதர்ஷன்- முத்துக்குமார் மதீஸ்வரன்- பே. அன்ரன் றஞ்சித்- ராஜரட்ணன் சசிககுமார்- போ. சிவகுமார்- ம. மங்களேஸ்வரன்- கந்தைய சுகுணதாஸ்- கணியுட் ஏனெஸ்ட- மகாலிங்கம் கிஷ்ணா- கி. ஜின்செல்ரன்,

ஆனந்தராஜா பிறேமராஜா- முசியன் மேரியூஜின் கிப்ஸன்- செபமாலை யூடஸ்மிலான்- கணகலிங்கம் செந்தூரன்- அ. றிச்மண்ட்ஜனின்- தியாகராசா சத்தியேந்திரன்- சகாதேவன் சுதாகரன்- தர்மலிங்கம் சகாதேவன்- பிறஞ்சிஸ் பிறேம்குமார்,

யோகேஸ்வரன் பிரதீபன்- இம்மனுவேல் அல்மன்ஸ் அமலராஜ்- ஏட்வேட்எட்மன் றீகன்- திருநாவுக்கரசு பத்மசிவகுணதாஸ்- சிவலோகநாதன் பத்மபிரினியன்- தங்கராசா- தயாபரன்- தர்மலிங்கம் தவச்செல்வன்- அருள்பிரகாசம் றெஜி. (உ)

# சிறு கைத்தொழில் உதவித் திட்டம்

(யாழ்ப்பாணம்)
நல்லூர் பிரதேச செயலக பிரிவைச்சேர்ந்த செவிப்புலன் இழந்தவர்களுக்கு உதவும் முகமாக சிறு கைத்தொழில் உதவு திட்டத்தின் அடிப்படையில் சுழற்சி முறைக் கடன் வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை யு. என். எச். சி. ஆர் அமைப்பு மேற்கொண்டு வருகின்றது.

இதன் முகற் கட்டமாக கால்நடை வளர்ப்பு தையல், சிறு வியாபாரம் ஆகிய தொழிற்றுறைகளுக்கு இனம் காணப்பட்ட 36 பயனாளிகளுக்கு சுழற்சி முறையிலான கடன் வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கென 3 இலட்சத்து30ஆயிரம் ரூபா நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது (உ-6)

# நாயினால் கடியுண்ட சிறுவன் மரணம்

[யாழ்ப்பாணம்]
கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் நித்திரையில் இருந்த வேளை நாயினால் கடியுண்ட சிறுவன் கடந்த செவ்வாய்க்கிழமை யா/மருத்துவ மனையில் மரணமானான்.

இணுவில் தெற்கைச் சேர்ந்த த.துஷ்யந்தன்[வயது 14]என்ற சிறுவனே மரணமானவனாவான்.

மேற்படி சிறுவன் நாய்க்கடிக்குஇலக்கான போதிலும் விசர்நாய் தடுப்பூசியை ஒழுங்காகப் போடாமையினால் ஏற்புவலி ஏற்பட்டுஇம் மரணம் சம்பவித்ததாகக் கூறப்படுகிறது.

[[illegible]]

# கட்டாக்காலி நாய்கள் பிடிப்பதற்கு நடவடிக்கை

(மந்திகை)
பருத்தித்துறைப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்களைப் பிடிப்பதற்கான நடவடிக்கைகள் இன்றுமுதல் ஆரம்பமாகவுள்ளன.

மந்திகை ஆஸ்பத்திரி சுற்றாடல், மந்திகைச் சந்தை, தேவரன், கருகம்பன். மடத்தடி.மந்திகை கந்தமுருகேசனார், சிலையடி,சாரையடி, கிராமக்கோட்டடி ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்படு எனம் அறிவிக்கப்பட்டுள்ளது (உ-23)

# தேசிய கல்வியியற்கல்லூரி கண் காட்சி இரு தினங்கள்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம்] தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்வியல் கண்காட்சி எதிர்வரும் 17 ஆம் 18 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

மாணவர்களின் கல்விவிருத்திக்கு வேண்டிய பல்வேறு அம்சங்களை கருத்தில் கொண்டு இக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கண்காட்சியை பார்வையிடவிரும்புகின்ற பாடசாலை அதிபர்கள்கல்வியியற் கல்லூரியுடன் தொடர்புகொண்டு தமக்குரிய நேரத்தை ஒதுக்கிக் கொள்ளலாம் என்பதை கண்காட்சி ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (உ-8)

# நேர்முகப் பரீட்சை 35 பேர் தோற்றவில்லை

(மந்திகை)
தென்மராட்சி கல்வி வலய பாடசாலையில் கற்பித்த தொண்டர் ஆசிரியர், பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்வழங்குவதற்காக நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் 35 பேர் தோற்றவில்லை யெனப் தெரிவிக்கப்படுகிறது.

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள 120 பேரில 30 பேர் தோற்றவில்லை எனவும் தொண்டர் ஆசிரியர்களில 23 பேரில் 5 பேர் தோற்றவில்லை எனவும் மேலும் தெரிவிக்கப் படுகிறது. (உ-23)

## பயிற்சிப் பட்டறை

[வட்டுக்கோட்டை]
இலங்கை முகாமைத்துவ சேவை ஆட்சேர்பபு.இலங்கை நிர்வாக சேவைப பரீடசைக்கான பயிற்சிப பட்டறை யா/மத்திய கலலூரியில் கடந்த மாதம் 28 ஆம திகதி ஆரமபமாகி நடைபெற்று வருகின்றது. [உ]

## பூர்த்தி விழா

(ஊர்காவற்றுறை)
காரைநகர் வ்ளானை சனசமூகநிலைய18 வது ஆண்டுப் பூர்த்தி நிகழ்வும ரூலக தொலைககாடசி திறபபுவிழாவும் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை 2. 00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

விளானை சனசமூக நிலையத் தலைவர்கா. குலசேகரம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் என். மதனராஜா, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே எக்ஸ். செல்வநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுளளனர் (உ-75)

## ஒருங்கிணைப்பாளர் நியமனம்

(சங்கானை)
வலிகாமம மேறகு பிரதேச செயலர் பிரிவில நடைமுறைப் படுத்தபபடவுள்ள அபிவிருத்தி தொண்டர்களுக்கான பயிற்சியளிப்பு திட்டத்திற்கென,இரண்டு அபிவிருத்தி ஒருங்கிணைபபாளர்கள நியமனம செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி ஒருங்கிணைபபாளர்களாக செலவி தி. கண்ணகி,ப ரமணன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் (உ 24)

## கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]
மக்கள் குறை நிவர்த்திச் சேவை பற்றிய சகல திணைக்களத் தலைவர்களுக்குமான கலந்துரையாடல இன்று பிப.2.30 மணிக்கு யாழ் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (உ)

# தாதியர் விடுதிக் கட்டடம் புனரமைப்புக்குநிதிஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனாவைத்திய சாலையில் உள்ள தாதியர் விடுதிக் கட்டடத்தை திருத்தி அமைப்பதற்கு 5 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி. யின் யாழ். மாவட்ட தலைமைச் செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். போதனாவைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச்சங்கப் பிரதிநிதிகள் சந்தித்துப் பேச்சு நடத்தியபோது இத்தகவலை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தாதியர் விடுதியை புனரமைபபு செய்வதற்குரிய பணிகளை உடன் ஆரம்பிக்க வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாதியர்களுக்கு துவிச்சக்கரவண்டி, மோட்டார்வண்டிகள் விடும் தரிப்பிடம் ஒன்றினையும் அமைத்துக் கொடுக்கவும் அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பில் கலந்து கொண்ட சங்கப்பிரதிநிதிகளால் 24 மணிநேரமும் தொடர்ச்சியாக தாதியர் விடுதிக்கும் ,வைத்தியசாலை வாட்டுகளுக்கும் நீர் வசதி செய்து கொடுக்கும்படியும் பல ஆண்டுகளாக வழங்கப்படாமல் இருக்கும் மேலதிக நேர நிலுவைப் பணம் விடுமுறை நிலுவைப்பணம் ஆகியவற்றை வழங்கக் கோரியும் தாதியரின் பயிற்சி வகுப்புகள் யாழ்ப்பாணத்தில் நடாத்த நடவடிக்கை எடுக்கக் கோரியும், மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. [உ-5]

# நிர்வாகிகள் தெரிவு

(மந்திகை)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தென்மராட்சி பிரிவிற்கான நிர்வாகத் தெரிவு அண்மையில் நெல்லியடி திரு இருதயக் கல்லூரியில் நடைபெற்றது.

தலைவராக செ. மகேஸ்வரன், உப தலைவராக வை. இராசரத்தினம், செயலாளராக ப. குகவீரசிங்கம், பொருளாளராகஇ. யோகேஸ்வரன் ஆகியோரும் 5 செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (உ-23)

# மாகியம்பதிக்கு மின்சாரம் வழங்குவதில் பாரபட்சம்

(யாழ்ப்பாணம்)

மாகியம்பதிக்கு மின் விநியோகம் மேற்கொள்வதில் அதிகாரிகள் அசண்டையீனமாக நடந்து கொள்வதாக அப்பகுதி பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்படி பகுதியின் அயற் கிராமங்கள் அனைத்திற்கும் மின்சாரம் வழங்கப்பட்டு, நாட்கள் பலவாகியும் தமது பகுதியை மட்டும் புறக்கணிக்கும் விதத்தில் அதிகாரிகள் நடந்து கொள்வதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் இது விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நேரடியாக தொடர்பு கொண்டும், மகஜர்கள் அனுப்பியும் எந்தவொரு பயனும் எட்டவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது; உ-7

# கோண்டாவில் டிப்போவுக்கு மேலும் பதினெட்டு பேருந்துகள்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச்சபை கோண்டாவில் டிப்போவுக்கென 18 புதிய பேருந்துகள் கப்பல் மூலம் காங்கேசன் துறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இதன் மூலம் குடாநாட்டு மககளின் போக்கு வரத்துகள் சீர்ப்படுத்தப்படும எனவும், இதுகாலவரை போக்குவரத்துச் செய்வதில் அனுபவித்து வரும் சிக்கல்கள் தீரும் எனவும் நம்பப்படுகிறது.

இது தவிர, முன்பு இடம் பெற்று இடை நிறுத்தப்பட்ட சேவைகள் சிலவும் ஆரம்பிக்கப்படும் என பொதுமக்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர், (உ)

# வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்ரீ கதிரைமலைச் சிவன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும நடைபெறவுள்ளன. (செ)

# விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கு வேண்டிய நிதியுதவி அளிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு -புனரமைப்பு அமைச்சுக்கூடாக விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்ய போதிய நிதியுதவி அளிக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மாகாண மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளுக்கு யாழில் இருந்து திருமலை செல்லவுள்ள இளம் விளையாட்டு வீரர்கள் மத்தியில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட இளம் விளையாட்டு வீரர்கள் நேற்று முன்தினம் ஈ. பி. டி. பி. யின் யாழ் மாவட்ட தலைமைச் செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவுடன் சந்திப்பு ஒன்றினை மேற்கொண்டிருந்தார்கள்:

இச் சந்திப்பில் அமைச்சர், தொடர்ந்து பேசுகையில் சமுதாயத்தினுடைய முன்னேற்றத்துக்கு விளையாட்டுத்துறை முக்கியமானது. அரசியல் கட்சி என்ற வகையில் வாய்ப்புக்களைப் பயன்படுத்தி, யாழ். மாவட்ட விளையாடடுத்துறையை ஊக்குவிக்க வேண்டும் எனும் எனது அவாவினைப் பூர்த்தி செய்யும்காலம்வந்துவிடடது.

கடந்த காலங்களில் இதத்கைய சந்தர்ப்பங்கள் இருந்திருக்கவில்லை. கிடைதத சந்தர்ப்பங்களையும சரிவரப் பயன்படுத்தப் படவில்லை. எனவே தற்போதுள்ள சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி எமதுவிளையாட்டுத் துறையை அபிவிருத்திசெய்ய நீங்கள்உரிமையோடு கேட்கலாம்.

விளையாட்டுத்துறையினை அபிவிருத்தி செய்வதற்காக இவ் வருட திட்டங்களை விரைவாக செயற்படுத்தியுள்ளோம். இத் திட்டங்களின் வெற்றிகரமான நிறைவேற்றலுக்கு சுமுகமான சூழலும் நிலவ நீங்கள் யாவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக்கேட்டுக் கொண்டார்.

இச்சந்திப்பின் போது யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் ஈ. பி டி. பி யின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான கே. வி குகேந்திரன், யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து, வைத்திலிங்கம், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்திருமதிரூபசிங்கம், நல்லூர் பிரதேச சபைத் தலைவரும் ஈ. பி. டி. பி யின் யாழ். மாவட்ட உதவி அமைப்பாளருமான க. மணிபல்லவராஜன் (நிஷாந்தன்) ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

விளையாட்டு வீரர்கள் மாகாண மட்டததிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள திருகோணமலைக்கு செல்வதற்குரிய பயணச் செலவுகள் அனைத்தையும் அமைச்சரின் பணிபபின் பேரில் வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# திருநாள் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் கத்தோலிக்க யாத்திரைத் தலமாகிய பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை ஆலய வருடாந்த திருநாள் திருப்பலி 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 6.மணிக்குத் திருப்பலியும் 7.30 மணிக்கு யாழ், ஆயர் வணதோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் திருநாள் திருப்பலியும் யாத்திரிகரின் நன்மை கருதி 11 மணிக்கு திருப்பலியும் திருச் சொரூப ஆசிரும் இடம் பெறும். (உ-7)

# உயிராபத்தின் மத்தியில் தட்டிவான் சேவை

(துன்னாலை)

பருத்தித்துறை, கொடிகாமத்திற்கு இடையிலான தனியார் தட்டிவான் சேவை பேராபத்தின் மத்தியில் இடம் பெறுவதாக அதில் பயணிக்கும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி தட்டிவான் சேவையில் அளவுக்கதிகமான பயணிகளை ஏற்றுவதோடல்லாமல்,

பொருட் பொதிகளையும் தொகையாக ஏற்றுவதனால் பயணிகள் மிதி பலகையில் நின்று பலத்த உயிராபத்தின் மத்தியில் தமது பயணத்தை மேற்கொள்வதாக கூறப்படுகிறது. (உ-41)

# குறோஷியாவுடன் இலங்கை ஒப்பந்தம்

(கொழும்பு)

இலங்கையும் குறோஷியாவும், செவ்வாயன்று புதிய ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

பயங்கரவாதம், போதைவஸ்து கடத்தல், சட்டவிரோதக்குடியேற்றம் ஆகியவற்றை எதிர்க்கும் வகையிலான ஒப்பந்தம் ஒன்றிலே கைச்சாத்திட்டுள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் குறோஷிய வெளிவிவகார அமைச்சருடனான இரண்டு நாள் பேச்சு வார்த்தையில் இவ் ஒப்பந்தம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது; (உ-7)

# மலசலகூடம் சீரில்லை

(மல்லாகம்)

சுன்னாகம் மீன் சந்தையின் அருகில் கட்டப்பட்டு பாவனைக்குட்படுத்தப்பட்டுள்ள மலசலகூடம், சீரற்றபாவனையால் பழுதடைந்து வருகிறது என பாவனையாளர் தெரிவித்துள்ளனர். (உ-122)

# ஒலிநாடா வெளியீடு

(மந்திகை)

அமரர் ஆத்ம ஜோதி நா. முத்தையாவின் ஆன்மீக சொற்பொழிவு ஒலிநாடாப் பேழை வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஊரெழு ஸ்ரீவிநாயகப் பெருமான்ஆலயத்தில் நடைபெறவுள்ளது; (உ-23)

# பரீட்சை திணைக்களம் படைத்த சாதனை இது

(கொழும்பு)

கடந்த வருடம் நடைபெற்றக பொ.த சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் இரண்டரை மாதங்களில் வெளியாகிசாதனைபடைத்ததுடன் அப் பெறுபேறுகளை முதன் முறையாக பரீட்சைத் திணைக்கள இணையத்தளத்தில் வெளியிட்டு வைத்தமை இலங்கைப பரீட்சைத் திணைக்கள வரலாற்றில் ஓர் புதிய திருப்பமென்று பரீட்சை ஆணையாளர் நாயகம் அமரக்கோன் தெரிவித்துள்ளார்.

கடந்த வருட சாதாரண தரப்பரீட்சைக்கு4இலட்சத்து 75 ஆயிரத்து 335 மாணவர்கள் தோற்றியுள்ளனர்.

அவர்களுள் ஒரு இலட்சத்து 38 ஆயிரத்து 888பேர் (29.34 வீதம்) உயர் தரம் கற்பதற்கான தகுதியைப் பெற்றுள்ளனர்.

அத்துடன், 7.1 வீதத்தினர் ஒருபாடத்திலேனும் சித்தியெய்தவில்லை எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, இவ் வருடம் நடைபெறவுள்ள சாதாரண தரப் பரீட்சையிலும்பொருத்தமான மாற்றங்களை அறிமுகப் படுத்தவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

# பிச்சை கேட்டுச்சென்றோர் கைப்பையை களவாடினர்

(சுண்டுக்குளி)

உண்பதற்கு உணவு கேட்டுச் சென்றவர்கள வீட்டில் இருந்த பணத்துடன் அடங்கிய கைப்பையை களவாடிச் சென்றுள்ளனர்.

சுண்டுக்குளி குருசோ வீதியில இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

ஒரேகுடும்ப அங்கத்தவர்கள் சிலர், மேற்படி பகுதி வீட்டிற்குச் சென்று உணவு தருமாறு இரக்கவே,

அங்கிருந்த பெண்மணி உணவை எடுத்து வருவதற்காக சமையலறைக்குச் சென்ற சமயம் தமது கைவரிசையைக் காட்டிச் சென்றுள்ளனர்;

இருப்பினும் உடனடியாக எடுத்த முயற்சியால், களவாடப்பட்ட கைப்பையும் அதனுள் இருந்த பணமும் பத்திரமாக மீட்கப்பட்டன. (உ-110)

# சித்தன்கேணி பாடசாலைக்கென காணி சுவீகரிப்பு

சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தின் கல்விச் செயற்பாட்டுக்கு உதவியாக அருகில் உள்ள ரெலிக்கொம் காணியை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஈ. பி. டி. பி யின் யாழ். மாவட்டத் தலைமைச் செயலகத்தில் சித்தன்கேணி ஸ்ரீ கணேசா பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து பாடசாலை காணி விடயம் குறித்து பேச்சு நடத்தியிருந்தார்கள்.

இதனையடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாடசாலையின் கல்விச் செயற்பாட்டிற்காக, அருகில் உள்ள ரெலிக்கொம் காணியை சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதேவேளை, ரெலிக்கொம் நிறுவனத்திற்காக வேறு ஒரு காணி வழங்கவும் உரிய ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. (உ)

# குப்பி விளக்கு வெடித்து தாயும் மகனும் காயம்

(மந்திகை)

எரிந்து கொண்டிருந்த குப்பி விளக்குக்கு எண்ணெய் விட்ட சமயம் குப்பி விளக்கு வெடித்ததில் தாயும் மகனும் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த திங்களன்று மந்துவிலிலிருந்து இடம் பெயர்ந்து துன்னாலை கோவிற்சந்தையடியில் வசித்துவரும் தம்பிராசா ஞானேஸ்வரி[வயது 35] அவரது மகன் தம்பிராசா அருள்கோபி[வயது12] ஆகிய இருவருமே எரிகாயங்களுடன் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-23)

# இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர் தர தொழில் நுட்ப நிறுவனத்தின் உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா இறுதி வருடப் பரீட்சை (எச்.என்.டி.ஏ.-IV) எதிர் வரும் 28 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 1ஆம் திகதி வரை நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார், [உ]

## இன்று ஒரு தகவல்

# சாகத் தயாராகுங்கள்!

நாளைக்கே நாம் சாகத் தயாராக இருக்க வேண்டும். ஏன்? நாம் எதற்காகச் சாக வேண்டும்? மனிதன் சாகாமலே இருக்க முடியாதா? இன்றுமட்டுமென்ன தொன்று தொட்டே, மனிதன் தோன்றிய நாள் முதலே அவன் உள்ளத்தைஉறுத்திக்கொண்டிருக்கும். ஓர்இறவாதகேள்விஇது. என்றைக் கிருந்தாலும் மனிதன் ஒருநாள் இறக்கத் தான் வேண்டும் என்றுதான் அன்று முதல் இன்றுவரைபதில்சொல்லப்பட்டு வந்திருக்கிறது. இந்தப் பதிலை ஏற்றுக்கொள்ளாதவர்கள் இருக்கின்றார்கள். யார்?

நோய்கள் தானே மனிதனைக் கொல்லுகின்றன. அந்த நோய்களை நாம் கொன்று விட்டால், மனிதன் ஏன் அப்புறம் சாகப் போகிறான்? ஆகையால் தான் நோய்களைக் கொல்வதற்குரிய வழிகளைக் கண்டு பிடிக்கப்போகிறேன்' என்று புறப்பட்டான் ஒருவன். இவன்தான் மருத்துவன். 'நோய்களைக் கொன்றால் மட்டும் போதாது, நோயற்ற மனிதர்கள் கூட, நீராலோ, நெருப்பாலோ எதிர்பாராதவாறு ஏற்படும் விபத்துக்களிற் சிக்கிக் கொண்டுஇறந்துவிடக்கூடும். அத்தகைய விபத்துக்கள்எதையும்பொருட்படுத்தாமல்தாங்கிக் கொள்ளக் கூடிய வைரம் பாய்ந்த ஒரு உடல் நமக்கு இருக்குமானால் அப்போது தான் நாம் மரணத்தை வென்றவர்களாவோம். அதற்குரிய வழியை நான் கண்டு பிடிக்கிறேன் பாருங்கள்' என்று கிளம்பினான் மற்றொருவன், அவன்தான் யோகி.

'பெரிய பெரிய மலைகள் கூட இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடுகின்றன. அப்படியிருக்க காயசித்தி பெற்ற உடல்மட்டும்என்றுமே அழியாமல் இருந்து விட முடியுமா? அதுவும் ஒரு நாளைக்கு அழியத்தான் போகிறது. ஆகையால் உடலைக் காப்பதன் மூலம் மரணத்தை வெல்ல முடியாது. அது அவசியமும்மல்ல. ஏனெனில் நாமெல்லாரும் உண்மையில் உயிர்களே தவிர உடல்களல்ல உடலே நாம் என்ற பற்றினை விட்டு, அந்தஉடலின் தொடர்பில்லாத உயிர் மாத்திரமாக நாம் நிலைத்து நின்று வாழப் பழகிக்கொண்டோமானால், அப்புறம் இந்த உலகமே அழிந்து போனாலும் நமக்கு அழிவுவராது! இதுவே மரணத்தை வெல்லும் வழி!' என்று சிறிது புரியாத மொழியில்பேசினான்ஒருவன். அவன் தான் வேதாந்தி.

இவர்களுடைய இந்தப்பேச்சுக்கள் எல்லாம் ஒரு சாதாரண மனிதனுடைய நோக்கில் வெறும், கலைக்குதவாத பேச்சுக்கள் 'வேதாந்திகூறும் ஞானமார்க்கத்தில் உண்மையிருக்கலாம்' ஆனால் அதைக் கடைப்பிடிப்பதற்கு எத்தனை பேர்களால்முடியப்போகிறது? ஒருபாம்பு, தன்கழன்றுவிட்ட சட்டையைப் பார்ப்பதுபோல் நாம் இவ்வுடலில் வாழ்ந்து கொண்டே இவ்வுடலை நம்முடையது என்று நினைக்காமல் வேறொன்றாகப் பார்க்க வேண்டும் என்பது ஞான மார்க்கத்தின் சாரம்இவ்வாறு பற்றற்று வாழும் பான்மை படைத்தவர்கள் உலகில் கோடிக்கு ஒருவர் கூடத் தேற மாட்டார்கள்.

கோடிக்கு ஒருவர் இந்த முறையைப் பின்பற்றட்டும். மற்றவர்கள் என்ன செய்வது? ஞான நெறியை விடமிகக்கடினமானது சித்தர்கள் கூறும் யோக நெறி, ஒருவன் தான் வாழ்வு முழுவதையுமே அதற்கென்று செலவிட்டால் கூட யோக நெறியில்வெற்றிகாண்பது அரிது. எனவே இந்த முறையும்நமக்குப் பயனற்றது தான். மற்ற எல்லாவற்றையும் விட மருத்துவ நெறியே மக்களுக்கு அதிக பயனுள்ளது. இது தான் இன்றைய விஞ்ஞான நெறியாக வளர்ந்திருக்கிறது: விஞ்ஞானம்இது வரையில் எத்தனையோ மாபெரும் அற்புதங்களைச் சாதித்திருக்கிறது. இறந்தவர்களுக்கு மீண்டும் உயிர் உண்டாக்கி அவர்களைச் சிறிது நேரம் பிழைக்க வைத்திருக்கும் அதிசயம் கூட மேல் நாடுகளில் நடந்திருக்கிறது.

ஆனால் சாவினைத் தவிர்க்கும் வழியை மட்டும் இன்னும் எவருமே கண்டு பிடிக்கவில்லை.

எதிர் காலத்தில் இன்னும் ஓர்ஆயிரம் ஆண்டுகள் கழித்து விஞ்ஞானிகள் இதைக் கண்டு பிடிப்பார்களானால், அவர்களுக்கு நம் வணக்கங்கள். வாழ்த்துக்கள்.

நன்றி.

கல்கண்டு 5.1.1967

# குடா நாட்டில் நிலவும் பெற்றோல் தட்டுப்பாடு விரைவில் நீங்குமா?

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தற்காலிகமாக நிலவும் பெற்றோல் தட்டுப்பாடு விரைவில் நிவர்த்தியாகும் என தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மாதத்தில் இரு தடவைகள் இடம்பெற்று வந்த எரிபொருள் கப்பல் சேவை ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதிக்குப் பின்னர் இடம்பெறாமையால் இத் தற்காலிகத்தட்டுப்பாடு தோற்றம் பெற்றுள்ளதாகவும்,

இதனை நிவர்த்திக்கும் வகையில் யாழ். குடாநாட்டுக்கு எடுத்து வருவதற்கு 750 பரல் பெற்றோல் கொழும்பில் வைத்துகப்பலில் ஏற்றப்படுவதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

அத்துடன், யாழ். குடாநாட்டில் எரிபொருளை சேமித்து வைக்கக்கூடிய வசதி இல்லாமை காரணமாகவே இந் நிலைமை ஏற்பட்டிருப்பதாக குறிப்பிட்டதுடன்,

பெற்றோலுக்கு மட்டுமன்றி ஏனைய எரிபொருட்கள் எவற்றுக்கும் தட்டுப்பாடு கிடையாது என்பதையும் அவ் வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

இதேவேளை,

கையிருப்பில் உள்ள பெற்றோல் பிராந்திய நிலையங்களுக்குப் பங்கீடு செய்யப்படவுள்ளதுடன்,

குடாநாட்டில் கூடுதல் பெற்றோலை சேமித்து வைக்கக்கூடிய வசதி விரைவில் ஏற்படுத்தப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது

[உ-10]

## சமூகமளிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அபிவிருத்தித் தொண்டர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச பிரிவுகளைச் சேர்ந்தவர்களை இன்று காலை 9.00 மணிக்கு யாழ் ஈ. பி. டி. பி தலைமைச் செயலகத்திற்கு வருமாறு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை அறிவித்துள்ளது. (உ-10)

## செயற்குழுக் கூட்டம்

(கொழும்பு)

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டம் திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு தலைமைச் செயலகத்தில் தலைவர் சட்டத்தரணி அ. விநாயகமூர்த்தி தலைமையில் இடம் பெறவுள்ளது .(உ)

## தமிழ் விழா ஆறாம் நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றம், கொழும்பு, திருகோணமலை, ஹப்புத்தளை திருமறைக் கலாமன்றக் கலைஞர்களுடன் இணைந்து நடத்திவரும் முத்தமிழ் விழாவின் ஆறாம் நாளான இன்று,

அருட்தந்தை எஸ். டேமியன் தலைமையில் 'உளவியல்' பற்றிய கருத்தரங்கு இடம் பெறும்.

தொடர்ந்து கலை நிகழ்வாக திருகோணமலை திருமறைக்கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் 'பொறி' எனும் நாடகம் இடம் பெறும். (உ-59)

## அதிகாரிகள் குழு நேரில விஜயம்

(கொழுமபு)

மாவனல்லவில இடம் பெற்ற சிங்கள - முஸ்லிம் கலவரத்தினால் ஏற்பட்ட சேதத்தை மதிப்பீடு செய்யும் முகமாக புனர்வாழ்வு அதிகாரசபையைச்சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்று இன்று அங்கு நேரில விஜயம் செய்ய உள்ளது.

அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் விசேட பணிப்பின் பேரில் செல்லும் இக்குழுவினர் சேதவிபரங்கள் பற்றிய பூரண அறிக்கையைத் தயார் செய்தபின்னர் அது அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## துணிச்சல் மிக்க பத்திரிகையாளர் விருது கோபாலரத்தினத்துக்கு

(கொழும்பு)

பேராசிரியர் கைலாசபதி விருது இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தினால் எஸ். எம். கோபாலரத்தினத்திற்கு வழங்கப்பட இருக்கிறது.

இரண்டாயிரமாம் ஆண்டுக்கான துணிச்சல் மிக்க பத்திரிகையாளர் என்ற இந்த விருதினைப் பெறும் பத்திரிகையாளர் கோபாலரத்தினம் மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் தினக்கதிர் பத்திரிகை ஆசிரியராவார்.

கோபு என அழைக்கப்படும் இவர்வீரகேசரி, ஈழநாடு, ஈழநாதம், ஈழமுரசு பத்திரிகைகளில் ஆசிரியராகக் கடமையாற்றியவர்.

இவருக்கான விருது இம்மாதம் 15 ஆம் திகதிமவுண்ட்லவேனியா ஹொட்டலில் வைத்து வழங்கப்படும்

(து)

## ஆய்வுகள் கற்கைகள் தொடர நிதியம்

(கொழும்பு)

ஆசிரியர் கல்வி தொடர்பான ஆய்வுகள் கற்கைகள் என்பவற்றினை ஊக்குவிப்பதற்காக தேசிய ஆசிரியர் கல்வி அதிகார சபையினால் நிதியம் அமைக்கப்படவுள்ளது

இதற்கான விபரங்களைப் பெற விரும்புவோர் தேசிய ஆசிரியர் கல்வி அதிகார சபையுடன் தொடர்புகொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

(து)

## நகரப் பகுதியில் சைக்கிள் திருட்டுஅதிகரிப்பு

யாழ். நகரப் பகுதியில் கடந்த ஒருவார காலப்பகுதியில் 3 சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன. யாழ். திருமறைக்கலாமன்றத்தில்கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகிய தமிழ் விழாவின் போது கலைஞர் ஒருவரின் சைக்கிள் திருடப்பட்டது தெரிந்ததே.

இதேபாணியில் நேற்று முன்தினம் தமிழ்விழா நிகழ்வுகள் இடம்பெற்றவேளை கலைஞர்களின் இருவரின் சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளதாய் அறிய முடிகிறது. (உ-104)

## குடாநாட்டில் இலட்சக்கணக்கான தென்னைகள் அழிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலம் வரை ஒரு இலட்சத்துக்கு அதிகமான தென்னைகள் அழிக்கப்பட்டிருப்பது தென்னை உற்பத்தியாளர் சங்க அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த அழிவை ஈடு செய்யும வகையிலான நடவடிக்கைகளில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கூடுதல் கவனம செலுத்த வேண்டும் என அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-து

## இனப்பிரச்சினைத்தீர்வில் ஐ.தே.கவின் நழுவல்போக்கு

### தமிழ்க் கட்சி ஒன்று அதிருப்தி

[கொழும்பு]

இலங்கையன் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஐக்கியதேசியக் கட்சியின் நழுவல் கொள்கை குறித்து தமிழ்க்கட்சி ஒன்று பலத்த அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில் நோர்வேயின் மத்தியஸ்தத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் காலங்களில் ஐக்கியதேசியக் கட்சியோ அல்லது அதன்தலைவர் ரணில் விக்கிரமசிங்காவோ உருப்படியான ஓர் ஆலோசனையை வழங்கியதாகக் கூறமுடியாது.

ஆட்சிக் கதிரையைப் பிடிப்பதில தமிழர் பிரச்சினையை வைத்து காய்களை நகர்த்தும் வழிமுறையாகவே அக்கட்சி பின்பற்றிவருகிறது

அக்கட்சித் தலைவர் நோர்வே சென்று அந்நாட்டின் விசேட பிரதிநிதி சொல்ஹெய்மிடம் பேச்சு நடத்தியபோதிலும்கூட இனப்பிரச்சினைக்கு ஆதரவாக எந்தவித செயற்பாட்டையும மேற்கொள்ளவில்லை.

புரிந்துணர்வு அடிப்படையில ஐக்கியதேசியக் கட்சியுடன் எதிர்காலத்தில செயற்படக்கூடிய வாய்ப்பு அறவே இல்லையென்றும அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (க)

## புலிகள் கலந்து கொள்ளாத பேச்சுக்கள் எதுவும் பயன் தரப்போவதில்லை

(யாழ்ப்பாணம்)

நிரந்தரசமாதானம் ஏற்பட வேண்டுமானால் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான விடுதலைப்புலிகளுடன் மட்டுமே இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்டஅமைப்பாளர் வேல்முருகு தங்கராசா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில் சமாதானம்குறித்த தீர்வுஎதையும் அரசாங்கம் முன்வைத்தாலும் விடுதலைப்புலிகள் கலந்துகொள்ளாத தீர்வுஎதுவும் பயன்தரமாட்டாதுஎன்றும் வலியுறுத்தியுள்ளார்.

இக்கருத்தையேதான் கட்சியின் மத்தியகுழுவிலும் வலியுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (க)

## மலேரியா நோய் தடுப்பு நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

வடமராட்சி கிழக்குப்பகுதியில் மலேரியா நோய் வேகமாகப் பரவிவருவதையடுத்து நோய்த்தடுப்பு மற்றும் அதன் ஆபத்துக் குறித்து பிரசாரக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மலேரியா நோய்த்தடுப்பு உத்தியோகத்தர்களால் மாணவர்கள் மற்றும் பொது மக்கள் மத்தியில் இப் பிரசாரக் கருத்தரங்கு நடாத்தப்பட்டு வருகிறது.

இதே வேளை, யாழ். குடாநாட்டில் வடமராட்சி கிழக்கு தவிர ஏனைய பகுதிகளில் மலேரியா நோய் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது. (உ)

## உலகதரிசன அறிவுப்போட்டி
## இலக்கம்-10

1. இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் பெயர் என்ன?
2. கேணல் முகமது கடாபி எந்த நாட்டுத்தலைவர்?
3. இந்திய இராணுவ தளபாட ஊழலை வெளிப் படுத்திய இணையத்தளம் எது?
4. தமிழ்க் குடிமகன் எக்கட்சியிலிருந்து விலகினார்?
5. காங்கிரஸின் எந்த மூத்த உறுப்பினர் கட்சியிலிருந்து விலகினார்?
6. உலகில் கிட்டத்தட்ட எத்தனை கோடிமக்கள் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்?
7. எந்தநாட்டு 200 ஆசிரியர்களும் மாணவர்களும் அசிட் வீச்சுக்கு உள்ளானார்கள்?
8. இந்திய வெளிவிவகார அமைச்சரின் அறையைத் தேடிச்சென்று உரையாடிய அமெரிக்க அதிபர் யார்?
9. எத்தனை ஆண்டுகளின்பின் பீஹார் மாநிலத்தில் பஞ்சாயத்துத்தேர்தல் நடைபெற்றது?
10. தனித்தமிழீழமே ஒரே தீர்வாகும்என்று தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட கட்சிஎது?
11. தமிழக முன்னாள் உள்துறை அமைச்சர் கார் விபத்தில் மரணமானார் அவர் பெயரென்ன?
12. எந்தநாட்டு விஞ்ஞானிகள் செயற்கை மூளையைக்கண்டு பிடித்துள்ளார்கள்?
13. ஈராக்கில் மாதாந்தம் எவ்வளவு தொகையான குழந்தைகள் மரணமாகிறார்கள்?
14. சினிமா நடிகர் டிராஜேந்தர் எத்தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிட்டார்?
15. பாகிஸ்தான்-ரஷ்ய உறவுக்குத் தடையாக உள்ள நாடு எது?
16. கம்யூனிஸ் நாடாக கியூபா எத்தனை ஆண்டுகள் பூர்த்தியாகின?
17. எந்தநாட்டு அகதிகள் புல்லைஉணவாக உண்ணுகிறார்கள்?
18. பர்மாவில் கண்டு பிடிக்கப்பட்ட மிகப்பெரிய முத்திரை என்ன?
19. அமெரிக்காவிலிருந்து புறப்பட்ட தானியங்கி விமானம் எங்கு சென்று இறங்கியது?
20. இந்த ஆண்டின் சிறந்த விமானநிலையமாக எது தெரிவுசெய்யப்பட்டது?
21. கொலம்பியாவிலுள்ள எந்தநகரத்தில் வருடந்தோறும் 60 சோடி நாய்களுக்குத் திருமணம் நடக்கிறது?
22. தமிழ்நாடு சட்டசபையில் எத்தனை தொகுதிகளில் தேர்தல் நடந்தது?
23. அமெரிக்காவின் உதவி வெளிநாட்டமைச்சர் யார்?
24. அண்மையில் விண்வெளியில் ரஷ்யருடன் தங்கிவிட்டுவந்த அமெரிக்க வர்த்தகர் யார்?
25. சோனியாகாந்தி இந்தியப் பிரஜை யாவதற்கு முன் எத்தொழிலில் ஈடுபட்டார்?

## போட்டி விதிமுறைகள்

1) வயது வேறுபாடின்றி எவரும் பங்கு பற்றலாம் (வலம்புரிக குடும்பத்தினரைத் தவிர)
2) வினாக்கள் யாவும் ஏப்ரல் மாத வலம்புரியின் உலக தரிசனத்தைச் சார்ந்ததாக அமையும்.
3) போட்டியாளர் தனது பெயர், விலாசம், பிறந்த திகதி என்பனவற்றை குறித்த படிவத்தில் எழுதி அதனை விடைத்தாளுடன் இணைத்து 'வலம்புரி' இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு அனுப்ப வைக்க வேண்டும்.
4) போட்டியில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் மூவருக்கு பரிசில்கள வழங்கப்படுவதுடன் அது பற்றிய விபரம் வலம்புரியில வெளியிடப்படும்.
5) விடைகள் யாவும் 25.05.2001 இற்கு முன் வந்து சேரக் கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும்.
6) வினா இலக்கங்களை குறித்து விடையை எழுதினால் மட்டும் போதுமானது. (வினாத் தாளை இணைக்க வேண்டாம்.)

## உலக தரிசன அறிவுப் போட்டி இல - 10

முழுப்பெயர்; ____________________

முகவரி; ____________________

____________________

பிறந்த திகதி; ____________________

போட்டியாளர் கையொப்பம்: ____________________

பெற்ற புள்ளிகள்; ____________

# தமிழக ஆட்சியை அமைப்பது யார்
# சட்டமன்றத் தேர்தல் இன்றாகும்

**தமிழ் நாடு சட்டமன்றத் தேர்தலை யொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது. (ஆ.ர்)**

**ரீ. ரீ. மயூரன்**

கடந்த சில மாதங்களாக மிகவும் பரபரப்புடன் பேசப்பட்டுவந்த தமிழக சட்ட சபைத் தேர்தல் இன்று ஆரம்பமாகியுள்ளது. கடந்த நான்கு மாதங்களாக நடைபெற்ற கட்சி அடிபிடிகளுக்கும், கட்சி விட்டுக் கட்சி தாவும் 'மந்தி முயற்சிகளுக்குப்' ஒருவரை ஒருவர் பரஸ்பரம் தாக்கி தொண்டைகிழியக் கத்திய பேச்சுக்களுக்கும் அளவே இல்லாமல் வழங்கிய தேர்தல் வாக்குறுதிகட்கும் யார் நல்லவர் யார் நம்பகமானவர் என்பதைக் காட்டக் கட்சித்தலைவர்கள் மேற்கொண்ட அதீதபிரயத்தனத்துக்கும் இன்றைய தேர்தலில் மக்கள் முடிவு சொல்லப் போகிறார்கள்.

### மக்கள் சக்தி மகத்தானது

வருடத்தில் அத்தனைநாட்களும் அடிபட்டு, உதைபட்டு வாழ்க்கையில் சொல்லொணாத்துயரை அனுபவித்து வந்த மக்கள், இந்த நாளில் மட்டுமே அரசர்கள் ஆகிவிடுகிறார்கள். இங்கே தமிழகத்துக் குடிசைகளில் நோயில் வாடும்வயது முதிர்ந்தவர்களைக் கூட்ட தமது தோளில் தூக்கிவாக்குப் போட அழைத்துச் செல்லும் கட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள். ஒரு வாக்குக் கூட அவர்களுக்கு விலைமதிப் பற்றது. சிறுவர்களுக்கு இனிப்புக்களையும் பெரியவர்களுக்கு உடுப்புக்களையும் கொடுத்து ஏவக்குப் போடுங்கள் என்று கட்சித்தொண்டர்கள் அழாக்குறையாக இரந்து கேட்கும் காட்சியைப்பார்க்கும் போது தான் 'மக்களின் சக்தி மகத்தான சக்தி' என்பதில் கொஞ்சம் உண்மை இருக்கின்றது போலப் படுகிறது.

மக்களைப் பொறுத்தவரை இன்றைய நாளில் அவர்கள் தான் தலைவர்கள். பாமரப் பாட்டி ஒருவர் தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து 'ஏன் சார்! இந்தத்தேர்தலை வருடம் முந்நூற்று அறுபத்தைந்து நாளும் வரப்பண்ணினால் எங்களுக்கு எவ்வளவு நல்லாயிருக்கும்' என வினாவியது விகடமாக இருந்தாலும் அவர்களது எதிர்பார்ப்பின் 'கனம்' புரிகிறதல்லவா?

### வாக்குப்பிச்சை

நிலத்திலிருந்துவானத்துக்கு மழை பெய்வது போலவும், கடலில் இருந்து மலைநோக்கி நதி ஓடுவது போலவும் இந்த நாள் ஒரு அதிசயமான நாள். காற்றைப் போலகண்ணுக்கு தெரியாமல் இருந்தவர்களையும், நாலு சுவர்களுக்குள் இருந்து கொண்டு 'ராஜ' ஆட்சி நடத்தியவர்களையும் தெருத் தெருவாய் அலைய வைத்து வாக்குப் பிச்சை கேட்க வைத்த இந்தத்தேர்தலுக்கு நாமெல்லாம் நன்றி சொல்லணும் சாமி; என்று தமிழக மக்கள் பேசிக் கொள்வது உணரக்கூடியதாக உள்ளது.

### பலிக்களம் நோக்கி

இதேவேளை அரசியல்வாதிகளின் நிலை இன்று மிகவும் பரிதாபகரமானது. பலிக்களத்துக்குப் போகும் கடாக்கள் போல நாளை மறுதினம் வெளியாகப் போகும் முடிவுகளுக்காக விழி பிதுங்கிக்காத்திருப்பதைப் பார்க்கும்போது இவர்களை விட அப்பாவிகள் நாட்டில் இல்லையென்றே கருத வேண்டியுள்ளது. கடந்த சில மாதங்களாக 'வாக்குப் பசியோடு' தெருத் தெருவாக அலைந்துமக்களை யாசித்த களைப்பு இன்னமும் நீங்காத நிலையில் வெற்றியென்ற முழக்கம் எந்தத் திசையில் முழங்கப் போகிறது என மருண்டு போன நிலையில் அரசியல் வாதிகள் அருண்டு போயுள்ளனர்

வெற்றி நமதே . : .வெற்றி நமதே என்று வீர முழக்கம் இட்டவர்கள் ஏற்படப் போகும் தோல்வியை தாங்குவதெப்படி என்று இப்போது தாம் தம்மைத் தயார்படுத்த தொடங்கி உள்ளதாக களத்தில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### யாருக்கு அதிக வாக்கு

இந்த நிலையில் இன்று தமிழ் நாட்டில் 234 தொகுதிகளில் தேர்தல் விழாதொடங்கவுள்ளது. 54 ஆயிரத்து தொளாயிரத்து பதினாறு வாக்குச்சாவடிகளில் 4 கோடியே 74 இலட்சம் மக்கள் வாக்களிக்க உள்ளனர். இந்த 4கோடியே 74இலட்சம் வாக்குகளில் யார் அதிகமானவற்றைப் பறிப்பது என்ற பந்தயத்தில் தி.மு.க கூட்டணியும், அ.இ அ தி.மு.ககூட்டணியும், ம.தி.மு கவும் மற்றும் சில சிறு கட்சிகளும் ஈடுபட்டிருக்கின்றன.

இறுதியில் இந்த மூன்றுமுக்கிய கட்சிகளிலும் ஒன்று ஆட்சியினை தனதாக்கிக்கொள்ள மற்றைய கட்சிகள் இந்தத் தேர்தலில் ஊழல் உள்ளது எனவும் வெற்றி பெற்ற அணி மோசடி செய்து விட்டது எனவும் இது ஒரு நீதியான தேர்தல் இல்லை எனவும் குறை கூறப் போவது மட்டும் நிஜமாகும்.

## உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(ஹராரே)

சிம்பாவேயின்முக்கியஎதிர்க்கட்சித் தலைவரான மாதுவ்ஸ்பென்சியாவின்மீது சுமத்தப்பட்ட தேச விரோதக் குற்றச்சாட்டுக்கான வழக்கு உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

இந்த உத்தரவில் மேற்படி வழக்கு நடவடிக்கை மேலும் ஒரு வாரத்திற்குஸ்தம்பிக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. (உ-9)

## ஷகிலா ஐயர் பூட்டான் விஜயம்

(புதுடில்லி)

இந்திய வெளியுறவுத் துறைச் செயலர் ஷகிலா ஐயர் இரண்டு நாள சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டு பூட்டானுக்குச் சென்றுள்ளார்.

இரு நாடுகளுக்கு மிடையிலான தொடர்புகளை வலுப்படுத்தும் முயற்சிகளில் ஒரு அங்கமாக இவ் விஜயம் அமைந்துள்ளதென இந்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-9)

## அறிவிப்பை மீறினர்

(சென்னை)

இந்தியாவில் சட்ட சபைத் தேர்தல் நடை பெறுகின்ற 5 மாநிலங்களிலும் நேற்று முன்தினம் தொடக்கம் பிரசாரங்கள் செய்யத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அதனை மீறி பிரசார நடவடிக்கைகளில் சில கட்சித் தொண்டர்கள் ஈடுபட்டு குழப்பங்களை விளைவித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது; (உ-9)

## சீனாவுடனான உறவுகளை வலுப்படுத்த ஜப்பான் உறுதி

(பீகிங்)

சீனாவுடனான உறவுகளை வலுப்படுத்தப் போவதாக ஜப்பான் பிரதமர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

நேற்று ஜப்பான் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் அந்நாட்டுடன் இருரதப்பு உறவுகளையும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்,

கடந்த மாதம் ஜப்பானின் 13ஆவது பிரதமராக பதவி ஏற்ற குஸுமி இது போன்ற வேறு பலநாடுகளுடனும் உறவுகளைப் பலப்படுத்த முயற்சி எடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

## பயிற்சியில் ஈடுபட்ட விமானம் விபத்தில்சிக்கியது

(புதுடில்லி)

இந்திய யுத்த விமானம் ஒன்று பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது விபத்துக்குள்ளானது.

பாகிஸ்தானின் எல்லைப் பகுதியில் செவ்வாய் அன்று இடம்பெற்ற இந்த விபத்தில் விமானி ஒருவர் பலியானர்.

எப்பொழுதும்இல்லாதவாறு இந்தியப்படைகள் பாரிய யுத்தப்பயிற்சியில் தற்போது ஈடுபட்டு வருகின்றன;

இதேவேளை, இப்பயிற்சியின் போது நூறுக்கும் அதிகமான மிக் 21 ரக போர் விமானங்கள் ஒரே நேரத்தில் வானில் பயிற்சியில் ஈடுபட்டதும் குறிப்பிடத்தக்கது; (உ-7)

## வீதி திருத்தம் இல்லை

[மல்லாகம்]

உடுவில் வடக்குகிழிச்சந்தை வீதி நெடுங்காலமாக திருத்தப்படாது மக்கள் பாவனைக்கு ஏற்புடையதல்லாது காணப்படுகிறது; (உ-122)

கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற்(கு) ஒற்கத்தின் ஊற்றாம் துணை

- குறள் -

வலம்புரி

## தாமதம் ஏன்?

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் மரணங்களின் வகைகளுக்குப் புள்ளி விபரங்கள் எடுத்தால் அகால மரணங்களே அதிகம் எனலாம். அந்தளவுக்கு விபத்துக்களும், தற்கொலைகளும் அதிகரித்துள்ளன.

இது யாழ்ப்பாணத்தின் சாபக்கேடு எனலாம். திடீரென ஒருவரை இழந்து விட்டால் அதன் தாக்கம்-பாதிப்பு-ஏக்கம்-பன்மடங்கு உயர்வானதென்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

இந்நிலைலயில் அகால மரணத்தால் ஏற்பட்ட கவலையை விட யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்த சடலத்தை மீட்டு வீட்டிற்கு கொண்டு செல்வதற்காகப் படும் பாடு போது மென்றாகிவிடும். அதிலும் இறந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுபவர்களின் தலையாட்டல்கள், சிரிப்புகள் எதுவும் கிடைக்காதவரின் குடும்பத்தைச் சேர்ந்தவராயின் சடலத்தை மீட்பதற்குதவம் கிடந்தாலும் அலுவல் நடக்கவே மாட்டாது.

யாழ். வைத்தியசாலையில் பல்வேறு சிக்கல்கள், பொறுப்புகள் உண்டென்பதும், பணிப்பாளர் மற்றும் நிர்வாகப் பகுதி - மருத்துவப் பகுதிகளுக்கு வேலைப்பளு அதிகம் என்பதும் மறுக்க முடியாத உண்மை,

அதே நேரம்அகாலமரணமடைந்தவரின்சடலத்தை வெளியே அனுப்புவதாயின் சட்ட வைத்திய அதிகாரி, மரண விசாரணை அதிகாரி அல்லது நீதிபதி, பொலிஸார் என [illegible]முத்தரப்பினர் ஒன்று சேர்வது கட்டாயமாகும். இதில் சட்டவைத்திய அதிகாரியும், பொலிஸாரும் வைத்தியசாலை சார்ந்தவர்கள், மரணவிசாரணை அதிகாரி நீதி மன்று சார்ந்தவர்.

நிலைமை இவ்வாறு இருக்கும் போதும் முத்தரப்பும் ஒன்று சேர்வது கார்த்திகைப் பிறையைக் காண்பது போல் இருப்பது தான் பலருக்கும் விசனத்தை ஏற்படுத்துகிறது.

குறிப்பிட்ட நேர வரையறைக்குள்விளக்கம்,விசாரணைகளை மேற்கொண்டு சடலங்களை ஒப்படைப்பது சம்பந்தப்பட்டவர்களின் தார்மீகக் கடமை என்பதை அவர்கள் மறக்காமல் இருப்பது இறைவன் கொடுத்த நல்ல பதவிக்கு நன்றி செலுத்துவதாகவே அமையும்.

---

மறைந்தார் மாண்பு

# தமிழ் மக்களின் தனிப்பெரும் தலைவராகிய

# ‘செல்வா‘வின் சேவைகளை நினைவுகூருவோம்

தலை சிறந்த அரசியல்வாதியும், நேர்மையும், நல்லெண்ணமும் கொண்டவரும், தமிழ் மக்களின் தனிப்பெரும் தலைவருமாக விளங்கிய மூதறிஞர், தந்தை செல்வாவை அவரின் சேவைகளுக்காகவும், நமது தேவைகளுக்காகவும் நினைவு கூருகின்றோம்.



பல நூற்றாண்டுகள் இடைவெளிக்குப் பின்தான் ‘பெரியவர்’ போன்ற ஒரு தலைவர் எம் இனத்திடையே தோன்ற முடியும். அத்தகைய ஒருவரின் அன்பைப் பெற்று அவரோடு சேர்ந்து, நான் பிறந்த இனத்திற்காக உழைக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். [illegible]வாராது வந்த மாமணி தந்தை செல்வா என்று முன்னாள் அமைச்சர் மு. திருச்செல்வம், கியூசி அவரைப் பாராட்டியிருந்தார்.

### தலைசிறந்த அரசியல்வாதி

‘‘Mr. Chelvanayka un like many ctyer P ominent men has been one of the most consistent and single minded of politclans this country has produced. Never has he trimec his sa ls to the wind of o portunism Never has ke jumPed to the crack of a master's whip. His sincerity has never bee challenged even by bt eres political (pponents.) என்று செல்வாவின் அரசியல் திறத்தினை மோர்ணிங் ரைம்ஸ் பத்திரிகை (Morning Times) 27 - 7 - 1957 இல் சுட்டிக் காட்டியுள்ளதும் உற்று நோக்கத்தக்கது.

### எதிர்ப்பு

‘நாம் எங்கள் நல் வாழ்வுக்காக எதைச் செய்தாலும் சிங்கள மக்கள் ஆத்திரம் அடைவார்களேஎன்று சும்மா இருந்தால் எமது இனம் பூண்டோடு அழிந்து விட வேண்டியதுதான். உரிமைகள் தாமாக வரா: விடுதலை நம்மைத் தேடி வராது. நாம் அதை நாடிப் போக வேண்டும். அதற்காகப் பாடுபட வேண்டும். இன்றைய நிலையில் சிங்கள அரசாங்கம் தமிழ் பேசும் மக்களுக்கு மீண்டும் மீண்டும் தீமையே செய்து கொண்டு வருகின்றது. அதனால் தமிழ் பேசும் இனம் அரசாங்கத்திற்குத் தன் எதிர்ப்பைத் துலாம்பரமாகக் காட்ட வேண்டும்; தொடர்ந்து காட்டியாக வேண்டும். விடாப்பிடியாகக் காட்டிக் கொண்டே இருக்க வேண்டும், என்று கொழும்பு, இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தில் செல்வா (சுதந்திரன்-1960 ஜனவரி 31) கூறியது கவனிக்கத்தக்க ஒன்றாகும். சுதந்திரத் தமிழரசு ஒன்று உதயமாவதை உலகில் எந்தச் சக்தியாலும் தடுத்து விட முடியாது என அவர் மட்டு நகரில், 1958 ஏப்ரல் 15 இல் கூறிய வாசகமும் நினைவு கொள்ளத்தக்கது;

### பெறுவதல்ல அடைவதே சுதந்திரம்

சுதந்திரம் வேறொருவர் கொடுக்கப் பெற்றுக் கொள்ளும் பொருளல்ல. அது சுக்கும் அல்ல, மிளகுமல்ல. மக்களின் வீரத்தாலும் தியாகத்தாலும் விடா முயற்சியாலும் மக்கள் அடையும் ஓர் உன்னத நிலைதான் சுதந்திரம். உலக சரித்திரத்தை எடுத்துப்பார்த்தால், சுதந்திரப் போராட்டம் நடத்திய எவ்வினமும் பலவீனமான இனமாகவே இருந்தது என்பது புலப்படும். பலங்குறைந்த நேரத்தில் தானே ஓர் இனம் தன் சுதந்திரத்தை இழப்பது? அவ்விதம் இழந்த இனம் தன் பலவீனத்தைப் பாராட்டிக் கொண்டு சுயாதீனப் போராட்டத்தில் இறங்காமல் நிற்குமாயின். விடுதலை எப்போ அடையும்? விடுதலை அடைந்த ஒவ்வொரு இனத்தின் சரித்திரத்தையும் ஆராய்ந்தால், அவ்வினம் தன் மனோ திடத்தினாலேயே வெற்றி அடைந்தது

அடிமைத்தனத்தில் இருக்கும் மக்கள் சுதந்திரத்தை அடைவதற்கு, இரு அம்சங்கள் ஒன்றாக அமைய வேண்டும். ஒன்று அம்மக்களின் சுயாதீன வேட்கைப் பெருக்கமும் அதற்காகச் செய்யும் முயற்சியும். மற்றது, உலக நடவடிக்கைகளால் வந்தேற்படும் சந்தர்ப்பம். கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டாகச் சுதந்திரப் போர் நடத்திக் கொண்டு இருந்த இந்தியாவிற்கு, இரண்டாவது மகாயுத்தம் முடிவடையும் காலமே சுதந்திரத்தை பெறுவதற்கு ஏற்ற சந்தர்ப்பமானது எமக்கும் சுயாதீனம் அடைவதற்கு சந்தர்ப்பம் வந்து சேரும். அச்சமயத்தை வெற்றித்தினமாக்குவதற்கு நாம் முழுஆயத்தமாகஇருக்க வேண்டும சுதந்திரம்வேறொருவர் கொடுப்பார் அல்லது வானத்திலிருந்துவிழும் என்று காத்திருப்பது தவறு நாம் அதற்காக உழைப்பவர்ளாக இருக்க வேண்டும். என்று 1957- 04- 14 இல் திருமலையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் முதலாவது மாநாட்டில் முன்வைக்கப்பட்ட கோரிக்கை முனைப்பான ஒன்றாகும்

### செல்வாவின் இறுதி ஆணை

தமிழ் பேசும் மக்களின்

[2 ஆம் பக்கம் பார்க் ]

**வசந்தா மணாளன்**

---

# விருத்தியடைந்த நற்சமுதாயம் உருவாகிட

# ஆளுமைமிக்க மானிடர்களின் சேவை அவசியம்

ஆளுமை(personality)என்றவுடனேயே உடல் அமைப்பையும் தோற்றத்தையும் நடையுடை பாவனையையும் நோக்குகின்ற ஒரு பலவீனமான பார்வை எம்மத்தியில் இருக்கிறது. வாட்டசாட்டமான எவரைக் கண்டாலும் அவரை ஆளுமைமிக்க ஒருவராகவே எம் மனது எடைபோடுகிறது. உண்மையில் ஆளுமை என்பது தனியே உடல் ரீதியாக வளர்ச்சியடைந்த ஒரு கருத்தியல் நோக்கு அல்ல. உடல் உளரீதியாக வளர்ச்சியடைந்த, சமூகக் கட்டமைப்புகளுக்குள்ளால் தன்னை மீளுருவாக்கம் செய்யக்கூடிய, அனைத்துக் கருத்தியல் நிலைகளிலும் நிதானமாகச் சிந்திக்கக் கூடிய, பக்கச் சார்பின்றி முடிவொன்றை எடுக்கக் கூடிய ஒன்றை ஆளுமை எனலாம்;

### இலக்கை நோக்கிய வளர்ச்சி

உளவளர்ச்சியைப் பொறுத்தவரை சிந்தித்தல், நடந்து கொள்கின்றமுறை, பண்புகள், மனப்பான்மை, மதிப்பீடு, நடத்தை போன்ற ஆளுமையில் தாக்கம் செலுத்தும் காரணிகளாகும். மனிதநேயம், சகிப்புத்தன்மை கொண்ட ஒருவன் சிறந்த மனிதனாக இருக்கும் அதே வேளை சிறந்த ஆளுமை உடையவனாகவும் காணப்படுவான்.

மனித உளவியலின் தந்தை கால்றொயேஸின் சித்தாந்தப்படி ‘ஒரு தாவரமானது சூரிய ஒளியை நோக்கி வளர்ந்து செல்வது போல. மனிதனானவன் வளர்ச்சியை நோக்கி அல்லது மாற்றத்தை நோக்கி அல்லது நல்ல இலக்கை நோக்கி முன்னேறிச் செல்வான். அந்த இலக்கை அடைவதற்கான வழிமுறைகள் சில வேளைகளில் அவனுக்குத் தெரியாமல் இருக்கலாம். காலக்கிரமத்தில் வழிமுறைகளை அறிந்து கொள்ளும்போது அவன் அவற்றைக் கடைப்பிடிப்பான் என்பது அவரின் வாதம்.

மனித வாழ்வியலின் ஓட்டத்தில் அறிவும் அனுபவமும் என்றைக்குமே வளர்ந்துதான் சென்றுகொண்டிருக்கின்றன; பல்வேறு கருத்தியல் சர்ச்சைகளுக்குள்ளாலும் புதியதொரு உண்மை வெளிவந்து கொண்டே இருக்கிறது சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, பண்பாட்டு ரீதியாக புதியதொரு நாகரிகத்தை நோக்கி மனிதன் பயணித்துக் கொண்டிருக்கிறான் அதில் தவறு இல்லை.

### நான் யார் என்ற நினைப்பு

நாம் எம்மைப பற்றி சில அபிப்பிராயங்களை வைத்திருக்கிறோம் இதனால் புரிந்துணர்வின் மூலவேர்களை அறுத்தெறிந்து கொண்டு மற்றையோரிடம் வாதப்பிரதி வாதங்களுக்கு செல்கிறோம். இந்நிலைப்பாடு ஆரோக்கியமான உள ஆளுமைக்கு ஒருபோதும் தீர்வாகாது. எம்மைப் பற்றிய அபிப்பிராயங்களை நாம் உணர்ந்து கொள்ளுமுன்பே பிறரால் அவை எமக்குச் சொல்லப்பட்டும் இருக்கலாம் எம்மைப்பற்றிய எண்ணங்கள், கணிப்பீடுகள், மதிப்பீடுகள், நான் யார்? என்ற வினாவை ஒவ்வொருகணமும் எழுப்பியே நிற்கின்றன. நான் யார்? என்னால் என்ன செய்யமுடியும்? என்ற வினாக்கள் ஆழ் மனதில் தோன்றும் போது சிலருக்கு அவை கற்பனை உலகில் மிதக்கின்றன சஞ்சரிக்கின்ற ஒருவித தைரி

2 ஆம் பக்கம் பார்க்க

**எம். எஸ். எஸ். கீர்த்தி**

(அரியாலை)

---

## சாயி அருளமுதம்



ஆசையின் பாற்பட்ட உலகில் நீங்கள் வதியும் பொழுது இன்பம், துன்பம் ஆகிய இரண்டையும் எதிர் கொள்ள நீங்கள் தயாராக இருக்க வேண்டும். ‘போகம்’ என்னும் மந்திரியை நீங்கள் வரவழைக்கும் போது அவருடைய பிரத்தியேகச் செயலாளரான ‘ரோகம்’ என்பவருடைய வரவுக்குப் நீங்கள் ஆயத்தமாயிருக்க வேண்டும்! ஆனால் ‘தியாகம்’ என்ற மந்திரியையோ அல்லது அவருடைய சகாவான ‘யோகம்’ என்ற மந்திரியையோ நீங்கள் வரவழைத்தீர்களானால், அவர்களுடன் கூடவரும் பிரத்தியேகச் செயலாளரான ‘போகம்’ என்பவரை நீங்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கக் கூடியதாகவிருக்கும். ஏனெனில் எஜமானர் முன்னிலையில் செயலாளருடைய செயற்பாடு அற்பமானதாகவே இருக்குமல்லவா?

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

தங்க நகை உலகில்
மங்காப் புகழ் பெற்ற
தங்க ஆபரணங்களின்
சாம்ராஜ்யம்
**மகாநதி ஜுவல்லறி**
72A, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
(இ/1896)

# யுத்தத்தின் மூலம் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது!

(லண்டன்)

இலங்கையின் இன்றைய சூழ்நிலையில் யுத்தத்தின் மூலம் எந்தப் பிரச்சினையையும் தீர்த்து வைக்கமுடியாது. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தையே சிறந்த வழியாகும். இவ்வாறு சுனீத்திரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

லண்டனில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகாவின் சகோதரி சுனீத்திரா பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கருத்தரங்கில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

தற்போது இலங்கையில் நடைபெற்று வரும் போரினால் ஆயுத வியாபாரிகளே பெரிதும் நன்மை அடைகிறார்கள்: இலங்கையின் பிரஜை என்ற வகையிலும், பௌத்த மதத்தவர் என்ற அடிப்படையிலும், இந்தப் போரினால் இனப்பிரச்சினை தீரப்போவதில்லை. இனப்பிரச்சினைக்கு சமரசத்தீர்வேஒரே வழியென்றும், அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

## மருதங்கேணியில் நேர்முகப்பரீட்சை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் அபிவிருத்தித் தொண்டர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை இன்று பிற்பகல் 2 மணியளவில் மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெறும்.

இதற்கு வசதியாக பருத்தித்துறை போக்குவரத்துச் சபை நண்பகல் 12 மணிக்கு பஸ் சேவையினை ஆரம்பித்து மீண்டும் பிற்பகல் 4 மணிக்கு மருதங்கேணியிலிருந்து பருத்தித்துறையை வந்தடையும் எனபிரதேசசபைத் தலைவர்சிறிரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார். (இ-43)

## முஸ்லிம்களின் - -

நாகொட அமரவம்ச தேரர் தலைமையில் நடைபெறும்.

மாவனல்ல, கொழும்பு, மற்றும் மூதூர்ப் பகுதிகளில் முஸ்லிம் மக்கள் மேற்கொண்ட வன்முறைகளால் சிங்கள மக்களின் உடமை அழிவடைந்துள்ளன:

அத்தகைய அழிவுச்செயல்களில் ஈடுபட்டவர்களை கைதுசெய்யாமையைக் கண்டித்தே மேற்படி எதிர்ப்புக் கூட்டமும், பேரணியும் நடத்தப்படவுள்ளதாகசிஹல உறுமயக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சம்பிஹ ரணவத்த தெரிவித்துள்ளார்:

இதேவேளை நேற்று முன்தினம் கொழும்பின் பல பகுதிகளிலும் இனவாத அமைப்புகளால் பௌத்த சிங்கள மக்களுக்கென அறிவுறுத்தப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டிருந்தன.

அதில் இன்று வர்த்தக நிலையங்களை மூடி துக்க தினமாக அனுஷ்டிக்குமாறும் கறுப்புக்கொடிகளைப் பறக்க விடுமாறும் கேட்கப்பட்டிருந்தது:

இந்நிலைமைகளை அடுத்து தலைநகரில் வாழும் முஸ்லிம்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளதுடன் எந்நேரமும் கொழும்பில் கலவரம் வெடிக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது. இதனையடுத்து தலைநகர் கொழும்பில் பாதுகாப்புப்படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது: (இ)

## ஈழத்தமிழர் : :

தையொன்றுடன் ஜேர்மனி சென்று அகதி அந்தஸ்து கோரினர்:

ஜேர்மனியில் அவர்களுக்கு மேலும்இருபிள்ளைகள்பிறந்த நிலையில் அகதிஅந்தஸ்து நிராகரிக்கப்பட்டு நேற்று அதிகாலை 5.00மணிக்கு அவர்களை வீட்டில் வைத்து கைதுசெய்த ஜேர்மனிய குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் இலங்கைக்கு அனுப்பியுள்ளனர்:

இதேவேளை மேற்படி கதிரன் பரராஜசிங்கத்துக்கு அஸ்மாவருத்தம் இருப்பதனால் அங்குவசிக்கமுடியாதென வைத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ05)

## சாவகச்சேரி வணிகர் மன்றத்திற்கு அழைப்பு

சாவகச்சேரி கைத்தொழில் வணிகமன்றத்தினர் நாளை காலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து மூன்று அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்றை கையளிக்கவுள்ளனர்:

இம் மகஜர் தொடர்பாக நாளை காலை 9.00 மணிக்கு யாழ். பஸ்நிலையத்தில் சாவகச்சேரிவணிகர்மன்ற நிர்வாகிகளைச் சந்திக்கும்படி ந. சிவபாலன் கேட்டுள்ளார்: (இ-77)

## செங்கலடியில்,,:

இத்தாக்குதலில் வந்தாறுமூலை எனும் இடத்தில்இளைஞர்ஒருவர் உயிரிழந்துள்ளார்.

படையினர் அச்சடலத்தை மீட்டு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க சர்வதேசசெஞ்சிலுவைசங்கத்திடம்ஒப்படைத்துள்ளனர். (இ)

## முஸ்லிம்மக்கள் - -

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது அந்த அறிக்கையில்மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: சிங்களஆயுதப்படைகளினாலும், காடையர்களினாலும் கொல்லப்பட்ட, படுகாயங்களிக்குள்ளான முஸ்லிம் சகோதரர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் தமிழ்-முஸ்லிம் உறவுகளை வலுப்படுத்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் என்றும் தீர்க்கமாகக் குரல் கொடுப்பார்கள் என உறுதி கூறுகின்றோம். என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ)

அற்புதமான
வடிவமைப்புக்களைக்
கொண்ட
அழகியதங்க நகைகளுக்கு
நங்கையர் நாடும் இடம்
**நியூ ராதிகாஸ் நகை மாளிகை**
189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(இ/ 1897)

## கொழும்பு . -

இச்சந்திப்பின்போது நோர்வேயின் தூதுவரிடம் தெரிவித்துள்ளார்:

**தலைவர் பிரபாகரனை எரிக்சோல் சந்திப்பார்,**

அன்ரன் பாலசிங்கத்துடன் நேற்று நடத்தியபேச்சுவார்த்தையை அடுத்து எரிக்சோல் ஹெய்ம் அடுத்தவாரம்இலங்கை வரவுள்ளார்,

இலங்கை வரவிருக்கும் அவர் ஜனாதிபதி சந்திரிகாவை கொழும்பிலும், விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை வன்னியிலும் சந்தித்துப் பேசுவார்எனஐரோப்பிய செய்தி ஊடகங்கள் தகவல்கள் வெளியிட்டுள்ளது.

**விட்டுக் கொடுப்புக்குத் தயாராக வேண்டும்,**

இது இவ்வாறு இருக்க அன்ரன் பாலசிங்கத்துடன் பேச்சுக்களை நடத்தியஎரிக்சொல் ஹெய்ம் கருத்துத் தெரிவிக்கையில், அரசும், விடுதலைப் புலிகளும் குறைந்த பட்சக் கோரிக்கையை முன்வைத்ருப்பதினால் இரு தரப்பும்விட்டு கொடுப்புடன் சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்த தயாராக வேண்டும்:

**சமாதானப் பேச்சுகளில் முன்னேற்றம் ஜனாதிபதியின் கருத்து**

அன்ரன்பாலசிங்கம் எரிக்சோல்ஹெய்ம் பேச்சுக்கள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா கருத்துவெளியிடுகையில், நோர்வேத்தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் இலங்கை வரும்போது சமாதானப் பேச்சுக்களில் முன்னேற்றகரமான சம்பவங்கள் நிகழக்கூடும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்;

## பிரிவுத் துயர் பகிர்வு

### வைத்திலிங்கம் கிருஷ்ணபிள்ளை

புங்குடுதீவு 7ம் வட்டாரம்வரதீவைச்சேர்ந்த வைத்திலிங்கம் கிருஷ்ணபிள்ளை நேற்றுஅகாலமரணமானார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 3மணிக்கு புங்குடுதீவு கேரதீவு மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

புங்குடுதீவு-07

## மரண அறிவித்தல்

### கதிரவேல் அம்பலவாணர்
(பேபி)

அற்கின்சன் வீதி, வட்டு: தென்மேற்குவட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டகதிரவேல் அம்பலவாணர் [பேபி] [04/ 05/ 2001] அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற கதிரவேல் (இளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர் இராசம்மா தம்பதியின் அன்பு மகனும் சரஸ்வதி தேவியின் அன்புக் கணவரும், கதிரவேல E S p&Co. யாழ், செல்வராணி, பிரேமராணி கேமராணி (வட்டு மத்தியகல்லூரிமாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற புவனேஸ்வரி, சிவசிதம்பரநாதன் (மலேசியா) மகேஸ்வரி, சண்முக சுந்தரம், ஆகியோரின் அன்புச் சகோதரரும்கந்தசாமி காலஞ்சென்ற பஞ்சாட்சரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காகபிற்பகல் 3 00 மணியளவில் கொத்துத்துறை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்:

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்:

தகவல்:
அ. கதிரவேல்
(மகன்)

வட்டு தென்மேற்கு,
வட்டுக்கோட்டை. (இ-1975)

## CENTRE FOR PERFORMING ARTS
(Thirumarai Kalamanram)

### SEMINAR

Title: 'Some Contemporary Western Philosophers and their Philosophies'
Speaker: Rev. Prof. N. Maria Xavier
Venue: Kalai Thoothu Mani Mandapam
Date: Thursday, 10th May 2001
Time: 10.30 A.M

All are Cordially Invited

J. Johnson Rajkumar
General Secretary
Centre for Performing Arts

238, Main Street,
Jaffna.
T p. 021-2393

(C/1973)

தங்க நகையுலகில் தமக்கெனத் தனியிடம் பிடித்தவர்கள்
**வினோ நகைப் பூங்கா**
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T. P. Fax - 2824. (இ-1914)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அச்சக நிறுவனத்தாரால் இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு மே மாதம் 10ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.